விலை ரூபா: 6.00

பக்கங்கள் :-பத்து

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
VALAMPURI

சங்கு 04 வள்ளுவர் ஆண்டு 2034 பங்குனி 01 சனிக்கிழமை (15.03.2003) தொலைபேசி~ 2223378 ஒலி 86

தரமான மூக்கு கண்ணாடிகளைப் பெற்றுக் கொள்ளவும், சிறந்த முறையில் பற்களைக் கட்டிக் கொள்ளவும், மிதப்புப் பற்களுக்கு கிளிப் போட்டுக் கொள்ளவும் நாடவேண்டிய இடம்




பி.ஜே.பர்னான்டோ

இல.542, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்

## அரசுக்கு புலிகள் வழங்கும் இறுதிச் சந்தர்ப்பம்

# "சுயாட்சி" வழங்க மறுத்தால் தமிழீழத் தனிஅரசு அமையும்!



## வைப்பகத் திறப்பு விழாவில் பாலா எச்சரிக்கை

(அலுவலக நிருபா பவன்)

**தமிழர் தாயகத்தில் தமிழீழ சமஷ்டி அரசு உருவாகுவதற்கு சிங்கள தேசம் இணங்கி வரவேண்டும்.இது அவர்களுக்கு நாம் வழங்கியுள்ள இறுதியான சந்தர்ப்பம் ஆகும்.தமிழ் மக்களுக்கு சுயாட்சி அதிகாரம் உடைய நிர்வாகத்தை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும். இல்லாது போனால் இன்றைய விடுதலைப் புலிகளின் நிர்வாகம் ஒரு தனி அரசாக மாறுவதை எவராலும் தடுத்து நிறுத்த முடியாது. இவ்வாறு விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் சிங்கள தேசத்திற்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.**

பளையில் அமைந்துள்ள தமிழீழ வைப்பகத்தை உத்தியோக பூர்வாமாக நேற்றுத் திறந்து வைத்து பேசியபோதே புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் மேற்கண்டவாறு சிங்கள தேசத்திற்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

பளை தமிழீழ வைப்பக மேலாளர் மரியநேசன் கீபேட் அன்ரனி தலைமையில் நேற்று முற்பகல் நடைபெற்ற திறப்புவிழாவில் அன்ரன் பாலசிங்கம் தொடர்ந்து பேசுகையில்;

யாழ்ப்பாணக் குடாநாட்டில் யாழ்ப்பாணப் பிரதேசமும், மற்றும் சில பகுதிகளும் இலங்கை இராணுவத்தின் கட்டுபபாட்டுக்குள்இன்னமும் இருக்கின்றது. இப்பகுதிகளை நாம் மீட்டெடுக்கவேண்டும். மீட்டெடுக்காமல் இருப்பது பெரிய குறைபாடாகவுள்ளது.இப்பகுதிகளை நாம் மீட்டெ டுத்தால் நாம் முழுமையான தமிழர் அரசு ஒன்றை வடகிழக்கில் உருவாக்கலாம்.(10ம் பக்கம் பார்க்க)

## திருகோணமலையில் நேற்று பூரண ஹர்த்தால் அனுஷ்டிப்பு

(திருகோணமலை)

திருகோணமலையில் நேற்று முழு நாளும் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டுள்ளது.

பொது ஜன ஐக்கிய முன்னணி மற்றும் ஜே.வி.பி என்பன சமாதான முயற்சிக்கு எதிராக மேற் கொண்டு வரும் நடவடிக்கைகளைக் கண்டித்தும் அவசர காலச் சட்டம் மற்றும் பயங்கரவாதத் தடைச் சட்டம் என்பன காலாவதியான பின்பும் தமிழ் அரசியல் கைதிகள் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளமைக்கு ஆட்சேபம தெரிவித்தும் விடுதலைப் புலிகளின் கப்பல் சாவதேசக் கடற்பரப்பில்

(10ம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி லண்டன் பயணம்

(கொழும்பு)

தனிப்பட்ட விஜயம் ஒன்றை மேற்கொண்டு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா நேற்று நண்பகல் லண்டனுக்கு பயணமானர்.

லண்டனிலிருந்து மேலும் பல ஐரோப்பிய நாடுகளுக்கு செல்லும் ஜனாதிபதி அடுத்தவாரமளவில் நாடு திரும்புவார் (த)

## ஆறாம் சுற்றுப் பேச்சில் புலிகள் பங்கு பற்றுவர்

### நோர்வே அமைச்சர் நம்பிக்கை

(கொழும்பு)

யப்பான் தலைநகர் டோக்கியோவில் இம் மாதம் 18ம் திகதி ஆரம்பமாகவுள்ள 6ம் சுற்றுப் பேச்சுவார்த்தையில் விடுதலைப் புலிகள் பங்கு பற்றுவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு என்று நோர்வேயின் பிரதி வெளி விவகார அமைச்சர் விடார் ஹெல்கீஸன் கொழும்பு கல்கிசையில் நோர்வே வர்த்தக நிலையம் ஒன்றை நேற்று திறந்து வைத்துப் பேசிய பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கீஸன் மேற் கண்டவாறு தெரிவித்துள்ளார்.அங்கு அவர் தொடர்ந்து பேசுகையில்,

(10ம் பக்கம் பார்க்க)

## புலிகள் ஒப்பந்தத்தை மீறும்போது ஊடகங்கள் மௌனம் சாதிக்கின்றன

### சரத் அமுனுகம பாய்ச்சல்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் புரிந்துணர்வு உடன்படிக்கையை அப்பட்டமாக மீறும்போது உள்ளூர் ஊடகங்கள் அதனை பெரிது படுத்தாது மௌனம் சாதித்து வருவதாக பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஊடகப் பேச்சாளர் சரத் அமுனுகம குற்றம் சாட்டியுள்ளார்.

கொழும்பில் நேற்றுக்காலை நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இக் குற்றச்சாட்டை சுமத்தினார்.இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்;

விடுதலைப் புலிகள் லாவோசில் விமான எதிர்ப்பு ஆயுதங்களை கொள்வனவு செய்கின்றனர். இது பற்றி சுட்டிக்காட்டப்பட்டுள்ள போதிலும் சிங்கள ஊடகங்கள் மௌனம் சாதிக்கின்றன. இவர்கள் தொடர்ந்தும் இவ்வாறு நடந்து கொள்வார்களானால் சம்பந்தப்பட்ட பத்திரிகைகளுக்கான வர்த்தக விளம்பரங்களைத் தடுக்கும் திட்டமொன்றை அமுல்படுத்த வேண்டியேற்படும்.

எதிர் கட்சியினரின் ஆர்ப்படங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்காத இப் பத்திரிகைகள் கண்டியில் நடைபெற்ற அரசாங்கத்தின் பொதக் கூட்டத்திற்கு பெரும் முக்கியத்துவம் கொடுத்துள்ளன என்றும். அமுனுகம கடுமையாக சாடியுள்ளார். (த)

## யாழ்.பல்கலைக் கழக துணைவேந்தராக பேராசிரியர் மோகனதாஸ் 19ம் திகதி பதவி ஏற்பார்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக் கழகத்தின் ஆறாவது துணை வேந்தராக பேராசிரியர் சுப்பிரமணியம் மோகனதாஸ் 19ம் திகதி புதன்கிழமை பதவியேற்கவுள்ளார்.மூன்றாண்டுகள் அவர் பதவி வகிப்பார்.

யாழ்பல்கலைக் கழகத்தின் துணை வேந்தராகத் தெரிவு செய்யப்பட்ட பேராசிரியர் சு.மோகனதாஸ் நேற்றுப் பிற்பகல் ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதியின் செயலாளரிடமிருந்து நியமனக் கடிதத்தைப் பெற்றுக் கொண்டார்.

துணைவேந்தராக நியமனம்

(10ம் பக்கம் பார்க்க)

## வன்னிப் பகுதியில் தானியங்கி வேவு விமானம் நோட்டம்

(கிளிநொச்சி)

இலங்கை விமானப் படைக்குச் சொந்தமான தானியங்கி வேவு விமானமொன்று நேற்றுக்காலை வன்னிப் பெருநிலப்பரப்பில் பறந்து மக்கள் மத்தியில் அச்சத்தையும் பீதியையும் ஏற்படுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இத் தானியங்கி வேவு விமானம்

(10ம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி-ஹெல்கீஸன் சந்திப்பு

## சமாதான முயற்சிக்கு ஆதரவு!

(கொழும்பு)

அரசும் விடுதலைப்புலிகளும் மேற்கொண்டுவரும் சமாதான முயற்சியில் தான் அதிக ஈடுபாடு கொண்டிருப்பதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தன்னைச் சந்தித்த நோர்வேயின் பிரதி வெளிவிகார அமைச்சர் விடார் ஹெல்கீசனிடம் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் மாளிகையில் நேற்று மாலை நடைபெற்ற இச் சுந்திப்பின்போது ஜனாதிபதியின் ஆலோசகரும் முன்னாள் வெளிவிகார அமைச்சருமான லக்ஸ்மன் கதிர்காமரும் உடனிருந்தார்.

இச் சந்திப்பின் போது ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா நோர்வேயின பிரதி வெளிவிகார அமைச்சர் விடார் ஹெல்கிஸனிடம் மேலும் தெரிவிக்கையில்; தற்போது இடம்பெற்று வரும் சமாதான முயற்சியில் தான் கூடியளவு ஈடுபாடு காட்டி வருவ்துடன் அர்ப்பணிப்புடன் (10ம் பக்கம்

## பளையில் வைப்பகம் திறப்பு

(கிளிநொச்சி)

தமிழீழ வைப்பகத்தின் பளை அலுவலகம் நேற்று முற்பகல் 10 மணிக்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தினால் திறந்து வைக்கப் பட்டது.

பளை தமிழீழ வைப்பக மேலாளர் மரியநேசன் அன்ரனி தலைமையில் நடை பெற்ற இத் திறப்பு விழாவின் போது முதன்மைச் சுடரினை கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர்

(10ம் பக்கம் பார்க்க)

நடுவு நிலைமை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்







# தகாத வார்த்தைகளால் திட்டிய அப்ரிடி போட்டியிலிருந்து நீக்கம்



பாகிஸ்தான் கிரிக்கெற் அணியின் அதிரடி தொடக்க வீரர் சைட் அப்ரிடி. ஒரு நாள் போட்டி ஒன்றில் 38 பந்துகளில் அதிரடியாக சதம் அடித்து உலக சாதனை படைத்த அப்ரிடி தென்னாபிரிக்காவில் நடந்துவரும் உலகக் கிண்ணப் போட்டியில் ஏமாற்றம் கண்டார்.

இந்தியாவுக்கு எதிரான லீக் போட்டியின் போது கிரிக்கெற் விதிகளை மீறினார். டெண்டுல்கர் மற்றும் ஷேவாக் ஆகியோர்களை தவறான வார்த்தையில் திட்டினார், அந்தப் பிரச்சினை தொடர்பாக அடுத்து நடைபெறவுள்ள சார்ஜா கிரிக்கெற் போட்டியில் இருந்து அப்ரிடி நீக்கப்பட்டார்.

பாக்கிஸ்தான் கிரிக்கெற் சபை அப்ரிடி மீது நடவடிக்கை எடுத்தது. மேலும் அவருக்கு பந்தைய சம்பளத்திலிருந்து 50 சதவீதம் அபராதமும் விதிக்கப்பட்டது. சம்பந்தப்பட்ட போட்டிக்கு நடுவராக இருந்த ஷெப்பர்டையும் அப்ரிடி திட்டியாதாக குற்றம்சாட்டப் படுகிறது. (த)



முதலாவது ஓவரிலேயே மக்மிலனின் விக்கெட்டைக் கைப்பற்றிய மகிழ்வில் சகீர்கான்

# இந்தியாவுக்கே உலகக் கிண்ணம் அடித்துச் சொல்கிறது எண் ஜோதிடம்

இந்தியக் கிரிக்கெற் அணியில் இராசி பார்க்கும் வேலைகள் மும்முரமாக நடைபெற்று வரும் அதேவேளை உலகக் கிண்ண இறுதிப் போட்டியில் அவுஸ்திரேலியாவை தோற்கடிக்கும் தகுதி இந்தியாவுக்கு மட்டும் தான் இருக்கிறது என்று முன்னாள் இந்திய வீரர்கள் பேசி வருகிறார்கள். இதற்கேற்றபடி சில கணித ஜோதிட முறைகளும் ஒத்து வருகின்றன. மேற்கிந்தியத் தீவு 1975மற்றும் 1979 ஆகிய ஆண்டுகளில் உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றியது. இந்த இரு ஆண்டுகளிடையே உள்ள வித்தியாசம் 4 ஆகும். அவுஸ்திரேலியா கடந்த1987 மற்றும் 1999ஆகிய ஆண்டுகளில் உலகக் கிண்ணத்தை வென்றிருக்கின்றது. இதற்கிடையேயுள்ள வித்தியாசம் 12 ஆண்டுகளாகும்.

கணிதக் கூட்டுத் தொடர் முறைப்படி பார்த்தால் அடுத்த ஆண்டு இடைவெளி 20 ஆண்டுகள் என்று வரவேண்டும். கபில்தேவ் தலைமையிலான இந்திய அணி கடந்த 83ம் ஆண்டு முதல் முறையாக உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றியது. தென்னாபிரிக்காவில் தற்போது நடைபெறும் போட்டியில் உலகக் கிண்ணத்தை இந்தியா கைப்பற்றுவதாக வைத்துக் கொண்டால் இரு ஆண்டுகளுக்கு இடையே உள்ள வித்தியாசம் 20 என்று வரும். எனவே இந்தியாவுக்கு சம்பியன் கிண்ணம் என்று அடித்துச் சொல்கிறது எண்கணிதம்.

லீக் போட்டிகளின் முடிவில் அவுஸ்திரேலியா தொடர்ந்து 12 வெற்றிகள் பெற்று சாதனை படைத்தது. சுப்பர் சிக்ஸ் ஆட்டத்தில் 2 வெற்றி பெற்று விட்டது. அடுத்து கென்யாவை சந்திக்க காத்திருக்கிறது. கென்யாவை வீழ்த்தும் அவுஸ்திரேலியா அரையிறுதியில் வெற்றி பெற்றதாக எடுத்துக் கொண்டால் தொடர்ந்து 16 வெற்றிகள் வரும். ஸ்டீவோ தலைமையிலான அவுஸ்திரேலிய அணி தொடர்ந்து 16 டெஸ்ட் போட்டிகளில் வெற்றி பெற்று சாதனை படைத்த பின்னர் இந்திய அணியிடம் உதைபட்டது. அது போல் இறுதிப் போட்டியில் அவுஸ்திரேலியாவின் வெற்றி சாதனைக்கு கங்குலி தலைமையிலான வீரர்கள் முற்றுப் புள்ளி வைப்பார்கள் என்று கணக்கிடப்பட்டுள்ளது. அப்படிப் பார்த்தாலும் இந்தியாவுக்கே உலகக் கிண்ணம்.

இது எல்லாவற்றையும் விட சுவாரஷ்யமான என்னொரு விஷயம் இந்தியாவுக்குத் தான் உலகக் கிண்ணம் என்பதை அடித்துச் சொல்கிறது. 79ல் சம்பியனான மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு இடது கை ஆட்டக்காரர் லாய்ட் கப்டனாக இருந்தார். 83ம் ஆண்டு உலகக் கோப்பையில் இந்திய அணிக்கு கபில்தேவ் கப்டனாக இருந்தார். அவர் வலது கை ஆட்டக்காரர். 87 உலகக் கிண்ணத்தை வென்ற அவுஸ்திரேலியக் கப்டன் பார்டர் இடது கை வீரர். 92ம் ஆண்டு கப்டன் இம்ரான்கான் (பாகிஸ்தான்) வலதுகை ஆட்டக்காரர். இப்படியே வந்தால் கடந்த உலகக் கிண்ணத்தில் சம்பியனான ஆவுஸ்திரேலிய அணிக்கு கப்டனாக இருந்தவர் ஸ்டீவோக். இவர் வலது கை ஆட்டக்காரர்.

இந்தக் கணக்குப்படி 2003ம் ஆண்டு உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றும் அணிக்கு கப்டனாக இருப்பது நிச்சயம் இடது கை ஆட்டக்காரர் என்பதில் சந்தேகம் இல்லை. எனவே அவுஸ்திரேலிய கப்டன் பொண்டிங உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றும் வாய்ப்பே இல்லை. இன்றைய நிலைவரப்படி இந்தியா, நியூசிலாந்து

(10ம் பக்கம் பார்க்க)



டெண்டுல்கர் ஆட்டமிழந்து செல்லும் காட்சி

## இன்றைய ஆட்டம்

**சிம்பாப்வே எதிர் இலங்கை**
(ஈஸ்ற் லண்டன்)
2.00 P.M

**அவுஸ்திரேலியா எதிர் கென்யா**
(டர்பன்)
6.00 P.M

## உலகக் கிண்ணக் கிரிக்கெற் - 2003

### இந்தியா எதிர் நியூசிலாந்து

#### நியூசிலாந்து

45.1 ஓவர்கள் முடிவில் அனைத்து விக்கெட்டுக்களை இழந்து 146 ஓட்டங்கள்

| | | | |
|---|---|---|---|
| மக்மிலன் | c ஹர்பஜன்சிங் | b சகீர்கான் | 0 (2) |
| பிளெமிங் | c டெண்டுல்கர் | b சிறிநாத் | 30 (59) |
| அஸ்ரில் | lbw | b சகீர்கான் | 0 (1) |
| ஸ்டைரிஸ் | c டிராவிட் | b நெக்ரா | 15 (21) |
| மக்கலம் | b சகீர்கான் | | 4 (16) |
| கைம்ஸ் | c சகீர்கான் | b ஹர்பஜன்சிங் | 20 (26) |
| ஹரிஸ் | lbw | b சகீர்கான் | 17 (37) |
| ஓரம் | b ஷேவாக் | | 23 (54) |
| வெட்டோரி | c கங்குலி | b ஹர்பஜன்சிங் | 13 (40) |
| ரா.்.வி | c&b மொங்கியா | | 11 (13) |
| பொண்ட் | not out | | 0 (6) |
| | உதிரிகள் | -13 | |

#### பந்து வீச்சு - இந்தியா

| | | | |
|---|---|---|---|
| சகீர்கான் | 8 | 42 | 4 |
| சிறிநாத் | 8 | 20 | 1 |
| நெக்ரா | 10 | 24 | 1 |
| ஹர்பஜன்சிங் | 10 | 28 | 2 |
| கங்குலி | 2 | 4 | 0 |
| டெண்டுல்கர் | 5 | 20 | 0 |
| ஷேவாக் | 2 | 3 | 1 |
| மொங்கியா | 0.1 | 0 | 1 |

#### இந்தியா

40.4 ஓவர்கள் முடிவில் 3 விக்கெட் இழப்பிற்கு 150 ஓட்டங்கள்

| | | | |
|---|---|---|---|
| ஷேவாக் | c ஸ்டைரிஸ் | b பொண்ட் | 1 (6) |
| டெண்டுல்கர் | c ஓரம் | b ரா.்.வி | 15 (16) |
| கங்குலி | b பொண்ட | | 3 (6) |
| கைவ் | not out | | 68 (129) |
| டிராவிட் | not out | | 53 (89) |
| | உதிரிகள் | - 10 | |

#### பந்து வீச்சு - நியூசிலாந்து

| | | | |
|---|---|---|---|
| ரா.்.வி | 10 | 41 | 1 |
| பொண்ட் | 8 | 23 | 2 |
| ஓரம் | 5 | 20 | 0 |
| விக்ரோரி | 5 | 18 | 0 |
| மக்மிலன் | 2 | 4 | 0 |
| ஸ்டைரிஸ் | 6.4 | 29 | 0 |
| கைம்ஸ் | 4 | 15 | 0 |

இ.ச. பேரம்பலம் சக நிறுவனத்துடன் இணைந்து
வலம்புரி
நாடாத்தும் மாபெரும் கிரிக்கெற் பரிசுப் போட்டி
போட்டியில் பங்கு பற்றுங்கள்
பெறுமதியான பரிசை வெற்றி கொள்ளுங்கள்
1.இம் முறை உலகக் கிண்ணத்தை வெல்லும் அணி எது?
2.இப் போட்டியின் சகல துறை ஆட்டக்காரர் யார்?
உங்கள் விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி
வலம்புரி
இல, 15 வெள்ளாந் தெரு
யாழ்ப்பாணம்

உலகக் கிண்ண கிரிக்கெற் போட்டி - 2003
முழுப்பெயர் : ........................
முகவரி : ........................
தே.அ.அ.இல : ........................
கையொப்பம்:........................
அனுப்ப வேண்டிய முடிவுத்திகதி
மார்ச் 15, 2003

# விடுதலைப் போரை உலகறியச் செய்த உத்தமர் குமார் பொன்னம்பலம்

## புலிகளின் அரசியல்துறையைச் சேர்ந்த வெண்ணிலவன் உரை

(பருத்தித்துறை)

''நேர்மையான,சத்தியத்திற்கும் நீதிக்குமான இனத்தின் சுபீட்சமான வாழ்வுக்காக நடைபெற்றுவரும் விடுதலைப் போராட்டத்தை உலகறியச் செய்தவர் அமரர் குமார் பொன்னம்பலம். பேரினவாதக் குகையிலிருந்து தன்னின விடுதலைக்காக ஓங்கி ஒலித்த குரல் அவருடையது".

மேற்கண்டவாறு மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் 3ஆம் ஆண்டு நினைவஞ்சலிக் கூட்டத்திலே உரையாற்றிய விடுதலைப்புலிகள் இயக்க அரசியல்துறை உறுப்பினர் வெண்ணிலவன் குறிப்பிட்டார்.

பருத்தித்துறை சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் சட்டத்தரணி ஆர். உருத்திரா தலைமையில் நெல்லியடியில் லஷ்மி தியேட்டர் மண்டபத்தில் இக்கூட்டம் இடம்பெற்றது.

தொடர்ந்து உரையாற்றிய வெண்ணிலவன்,

ஒரே தலைமையில் ஒன்று படுவதன் மூலம் தான் எமது இலட்சியத்தில் நாம் வெற்றி பெற முடியும். ஒரு சிலரைத் தவிர அனைவரும் ஒரே தலைமையில் ஒரே இனம் என்று ஒன்று பட்டுள்ளார்கள். தமிழ் கட்சிகள் ஒன்றுபட்டிருப்பது போல அனைவரும் ஒன்று பட்டு ஒரே சக்தியாகச் செயற்படும் போது நாம் வெற்றியை இலகுவாகப் பெறமுடியும்.

தமிழ் இன விடுதலை உணர்வை குமார் பொன்னம்பலம் சிங்கள தேசத்திற்கு ஆணித்தரமாக எடுத்துக் கூறியவர் வீரத்தமிழன் குமார் பொன்னம்பலம். பல்வேறு வகையான இன்னல்களை, குழப்பங்களை நேர்மையோடும் நெஞ்சுறுதியோடும் உலகுக்கு எடுத்துக் கூறினார்.

மக்களுக்கு உதவுவதோடு விடுதலைக்காகப் போராடுகிறோம் என்பதைப் புலப்படுத்திய அவர் தன்னையே விடுதலைக்காக அர்ப்பணித்திருந்தார்.

சொல்லொணா இன்னல்களை அனுபவித்து ஆயுதம் ஏந்திபிராத விடுதலை வீரனாக சிங்கள தேசத்திற்கு தமிழர் உரிமைகளை எடுத்துச் சொன்ன மாமனிதர்.தமிழர் உரிமைகளைப் புரிந்து கொள்ளாத பேரினவாதிகளால் அநாகரிகமான முறையில் கொடூரமாகக் கொல்லப்பட்டார்.

எமது மண்ணிலே பிறந்து விடுதலைக்காக வாழ்ந்த வீரர்களின் சாவு ஒருபோதும் வீணாகிவிட மாட்டாது. இது ஒரு வரலாறு. சிந்தப்பட்ட குருதிக்கு ஒரு வரலாறு நிச்சயம் இருக்கும்.அது ஈழத்தமிழர்களின் கௌரவ வாழ்வுக்கு வழி வகுக்கும்.

ஒவ்வொரு மக்களையும், தாய் மண்ணையும் நாம் பாசத்துடன் நேசிக்கிறோம். அதற்காக புலிகள் சாவை வாழ்வாக ஏற்றுள்ளனர்.

மனித கௌரவத்தோடும் மதிப்போடும் வாழ்வதற்காகவே நாம் அடிப்படை உரிமைகளைக் கேட்கிறோம். இதுவே எமது எதிர்பார்ப்பாகும்.

நாம் அனைவரும் ஒன்றுபட்ட, பலம் பொருந்திய சக்தியாகச் செயற்பட்டால் பேரினவாதிகளுக்குச் சாவு மணி அடிக்க முடியும். குமார் பொன்னம்பலம் எந்த மக்களுக்காக விடுதலை உணர்வோடு குரல் கொடுத்தாரோ அம்மக்களுக்கு நல்வாழ்வு கிடைக்க வேண்டும்.

தமிழீழ விடுதலைக்கு ஒரே தலைமையின் கீழ் ஒரேதேச சக்தியாக உழைப்பதே குமார் பொன்னம்பலத்திற்கு செய்யும் அஞ்சலியாகும். அவரின் கனவு வெற்றி பெறும் என்றார். (உ-52)

# கோமாளி என அனுராவை விமர்சித்த பட்டி வீரக்கோன்

(கொழும்பு)

திங்களன்று நடைபெற்ற சமாதான எதிர்ப்புக் கூட்டத்திலும், ஆர்ப்பாட்டத்திலும் பங்கு பற்றாததன் மூலம் சமசமாஜக்கட்சி குப்பை கூடைக்குள் போடப்பட்டு விட்டது என்று ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் சிரேஷ்ட தலைவர் ஒருவர் கூறியிருப்பதை பட்டி வீரக்கோன் நிராகரித்துள்ளார். ''கோமாளி''யின் கூற்றுக்களை என்னால் பாரதூரமானதாக ஏற்க முடியாது என்றும் அவர் சாடியுள்ளார்.

சமாதான நிலைப்பாட்டில் தமக்கு முரண்பாடான நிலைப்பாட்டை கொண்ட கூட்டங்களில்பங்கு பற்ற முடியாதென்று கூறி சமசமாஜ,கம்யூனிஸ்ட் கட்சிகள் அன்றைய கூட்டத்தில் பங்கு பற்ற மறுத்திருந்தன,

சுதந்திரக்கட்சியின் "முன்னாள் அமைச்சர்கள் ஏ.எச்.எம். பௌசி, றிச்சர்ட் பத்திரன ஆகியோர் கூட இதில பங்கு பற்றவில்லை.

இது பற்றி கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் டி.யு குணசேகர தெரிவிக்கையில்,

வடக்கு-கிழக்குப் பிரச்சினையில் நாம் கடந்தகால தவறுகளிலிருந்து பாடம் கற்றிருக்கிறோம்.

முன்பு டட்லி-செல்வநாயகம் ஒப்பந்தத்தை எதிர்த்து விட்டு பின்னர், அதன் தவறை உணர்ந்து விட்டோம். அதே தவறுகளை எம்மால் மீண்டும் மீண்டும் விட முடியாது. அதனால் தான் நாம் ஜே.ஆர். ஜயவர்த்தனவின் சமாதான முயற்சிகளையும் ஆதரித்தோம்.

வடக்கு-கிழக்கு பிரச்சினைக்கு எந்த அரசாங்கம் தீர்வை முன்வைத்தாலும் நாம் ஆதரிப்போம். கூட்டத்தில் நாம் பங்கு பற்றினால் அது எமது நிலைப்பாட்டை மறைமுகமாக பாதிக்கும் என்று தெரிவித்துள்ளார்.

இதேவேளை, மேற்படி சமாதான எதிர்ப்புக் கூட்டத்தில் ஸ்ரீலங்கா மக்கள்கட்சி, பேரியல் அஷ்ரப் தலைமையிலான ''நுஆ"ஆகியன பங்கு பற்றியிருந்தமை குறிப்பிடத் தக்கது. (உ

# கூட்டம்

(உரும்பிராய்)

யா/உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலய பழைய மாணவர் சங்கப் பொதுக் கூட்டம் இன்று காலை 9 மணிக்கு பாடசாலை அதிபர் சு.யோகராசா தலைமையில் நடைபெறவுள்ளது. (உ-215)

# தொண்டர் ஆசிரியர்களுக்கு ஆதரவாக ஆர்ப்பாட்ட பேரணி

(மன்னார்)

மன்னார் மடுக்கல்வி வலய ஆசிரியர் சங்கம் தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட வேண்டும் எனக் கோரி நேற்று ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்தியது.

நேற்றுக் காலை 10.30 மணியளவில் நெடுங்கண்டல் சந்தியில் இருந்து ஆரம்பமான இப்பேரணி இரு மைல்களுக்கு அப்பால் உள்ள அடம்பன் உதவி அதிபர் பணிமனை வரை சென்றது.

இப்பேரணியில் மன்னார் மாவட்ட இராணுவக் கட்டுப்பாடற்ற மடுப் பிரதேச கல்வி வலயத்தை சேர்ந்த 36 பாடசாலைகளின் ஆசிரியர்கள் மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் கலந்து கொண்டனர். (உ-8)

# களுத்துறைக் கைதிகளின் வழக்கு விசாரணைகளைத் துரிதப் படுத்தப் பணிப்பு

(கொழும்பு)

களுத்துறைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் வழக்கு விசாரணைகளைத் துரிதப்படுத்துமாறு சட்டமா அதிபர் கே.சி.கமலசபேசன் அரச சட்டத்தரணிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

இவ்வழக்குகளைத் துரிதப்படுத்தும் வகையில் அரச சட்டத்தரணிகளுக்கு சட்டமா அதிபர் விசேட ஆலோசனைகளையும் வழங்கியுள்ளார்.

இதன்படி அரசதரப்பில் ஆஜராகும் சட்டத்தரணி ஒருவர் வழக்குகளில் வாதாடுவதற்கு முன்னர் சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெற வேண்டும்.

களுத்துறைச் சிறைச்சாலையில் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தி வரும் தமிழ் அரசியல் கைதிகளில் 5 பேரை விடுதலை செய்யவும் மேலும் 5 பேரை பிணையில் விடுவிப்பதற்கும் சட்டமா அதிபர் திணைக்களம் நேற்று முன்தினம் அனுமதி வழங்கியுள்ளது.

இதேவேளை, இக் கைதிகளின் உண்ணாவிரதப் போராட்டம் நேற்று 14 நாள்களாகவும் தொடர்ந்து நடைபெற்றது. (உ-8)

# கிராம மட்டத்தில் நடமாடும் நூலக சேவை நடத்த யுனிசெவ் திட்டம்

## யுனிசெவ் அதிகாரி பிருதிவிராஜ் தெரிவிப்பு

(தென்மராட்சி)

யாழ்ப்பாணப் பொதுநூலகக் கட்டமைப்புப் பணிகளை வலுப்படுத்துவதற்கு யுனெஸ்கோ நிறுவனம் 200 இலட்சம் ரூபா பெறுமதியான திட்டத்தினை ஆரம்பித்துள்ளது. இதனடிப்படையில் 23 அதி நவீன கணனிகள் மூலம் பொதுநூலகம் கணனி மயப்படுத்தப்பட்டு வருகின்றது.

இவ்வாறு யுனெஸ்கோ நிறுவனத்தின் இலங்கை-புதுடில்லி பிராந்தியப் பணிமனையைச் சேர்ந்த பிருதிவிராஜ் யாழ்ப்பாணத்தில் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் றான் விடுதியில் நேற்று முன்தினம் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில், தமிழ் நாட்டில் இருந்து வந்திருந்த வாழும் கலை அமைப்பைச் சேர்ந்த கணேஸ்ஜீ, யாழ்.பல்கலைக்கழக புவியியல் பேராசிரியர் இரா.சிவச்சந்திரன், யாழ். அரச செயலக அதிகாரி எஸ்.நல்லையா ஆகியோர் சமுகம் அளித்திருந்தனர்.

யுனெஸ்கோ அதிகாரி பிருதிவிராஜ் அங்கு மேலும் தெரிவிக்கும் போது,

இலங்கையில் சமாதானத்தினை ஏற்படுத்தும் பணியாக யுனெஸ்கோ நிறுவனம் பல செயல் திட்டங்களை ஆரம்பித்துள்ளது. அந்த வகையில் யாழ்ப்பாணம் பொதுநூலகத்தில் பணி செய்யவுள்ள நூலகர்கள், ஊழியர்களுக்காக கணனிப் பயிற்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அத்துடன், யாழ்ப்பாணத்தில் கிராமிய மட்டத்தில் நடமாடும் நூலகத்தையும் ஏற்படுத்துவதற்கு திட்டம் வரையப்பட்டுள்ளது.

இந்த நூலகத்திற்குத் தேவையான நூல்களை தமிழகத்திலுள்ள ராஜா முத்தையாச்செட்டியார் ஆராய்ச்சி நூலகத்திலிருந்து தருவிக்கவுள்ளோம்.

இது எமது திட்டத்தின் முதலாவது அடியாகும். இன்னும் எதிர்காலத்தில் மேலும் பல திட்டங்களை யுனெஸ்கோ மேற்கொள்ளும்.

யாழ்ப்பாணப்பல்கலைக்கழகத்துடன் இணைந்து யாழ். சிற்றி ஹோலில் குடாநாட்டு ஊடகவியலாளர்களுக்கான ஊடகத் தகவல் பயிற்சி மையம் டென்மார்க் அரசின் 180 லட்சம் ரூபா நிதியுதவியுடன் மேற்கொள்ளப்படவுள்ளது.இதன் மூலம் இங்கிருக்கும் ஊடகவியலாளர்களுக்கு இன்ரர்நெற், இணையத்தளம் போன்ற நவீன வசதிகளையும் வாய்ப்புக்களையும் ஏற்படுத்திக் கொடுக்கவுள்ளோம்.

இத்துடன் குடாநாட்டில் 20 வருடம் நீடித்த யுத்தத்தின் காரணமாக மனப் பாதிப்புக்களை அடைந்துள்ள இளைஞர்-யுவதிகளுக்கு மன அமைதியை ஏற்படுத்தி அவர்கள் மன மகிழ்வுடன் வாழக்கூடிய வகையில் வாழும் கலை பற்றிய பயிற்சியினை தமிழகத்தைச் சேர்ந்த வாழும் கலை அமைப்பு மூலம் யாழ்ப்பாணத்தில் நடத்த யுனெஸ்கோ ஏற்பாடு செய்துள்ளது. இதற்கென அந் நிறுவனத்தைச் சேர்ந்த கணேஸ்ஜ வந்துள்ளார்.

இத்திட்டத்தின் மூலம் 1000 இளைஞர்-யுவதிகளை பயிற்றுவிக்கத் திட்டமிட்டுள்ளோம்.நாட்டில் சமாதானம் ஏற்பட்டால் தான் மக்கள் நிம்மதியுடன் வாழ முடியும். பணத்தைக் கொண்டு சமாதானத்தை அளவிட முடியாது. எமக்குத் தேவை சமாதானமேயாகும்.

யாழ் குடாநாட்டில் கலை,கலாசார விழுமியங்களை மேம்படுத்தும் திட்டத்தின் கீழ் இங்குள்ள கோட்டைகள்,கோவில்கள் போன்றவற்றின் வரலாற்று அம்சங்களை பேணும் திட்டத்தினை கலாசார முக்கோணத் திட்டம் போல ஆரம்பிக்கவுள்ளோம் என்று குறிப்பிட்டார்.

இப்பத்திரிகையாளர் மாநாட்டில் வாழும் கலை அமைப்பைச் சேர்ந்த கணேஸ்ஜீ தமது பயிற்சித் திட்டம் பற்றி எடுத்து விளக்கினார்.(உ-77)

# சட்டத்தரணிகள் 50 பேர் இன்று யாழ். வருகின்றனர்

(பருத்தித்துறை)

இலங்கைச்சட்டத்தரணிகள் சங்கத்தின் சட்ட உதவிகள் மன்றத்தினால் நடாத்தப்படும் இலவச சட்ட உதவி பற்றிய கருத்தரங்கும் ஆலோசனை வழங்கலும் நாளை வடமராட்சியில் நடைபெறவுள்ளது.

கரவெட்டியிலுள்ள வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும் இக்கருத்தரங்கில் ஆலோசனை வழங்கலிலும் கலந்து கொள்வதற்கு இலங்கை சட்டத்தரணிகள் சங்க சட்டஉதவி மன்றத் தலைவர் தலைமையில் 50 சட்டத்தரணிகள் அடங்கிய குழுவொன்று வடமராட்சிக்கு வருகை தரவுள்ளது.

இலங்கைச்சட்டத்தரணிகள் சங்க சட்ட உதவி மன்ற யாழ். மாவட்டக் கிளை, பருத்தித்துறை, சாவகச்சேரிக் கிளைகள் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன.

வறுமைக் கோட்டிற்குட்பட்ட இடம் பெயர்ந்தோர்,வயோதிபர்,சிறுவர், பெண்கள்,அநாதைகள் ஆகியோரை இக்கருத்தரங்கிலும் ஆலோசனை வழங்கலிலும்பங்கேற்றுப் பயன் பெறுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-10,52)

# பணியாளர்களுக்கு இடைக்கால படி வழங்கக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் சுற்றறிக்கையின் பிரகாரம் எமது சங்கம் இலாபத்தில் இயங்கிய மாதங்களில் வழங்க வேண்டிய இடைக்காலப்படி தலா 1200ரூபாவை பணியாளர்களுக்கு வழங்க வேண்டும்.

இவ்வாறு பருத்தித்துறை தென்னை பனைவள அபிவிருத்திச் சங்க கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கம் சங்கத்தின் தலைவரைக் கோரியுள்ளது.

01.12.1999 ஆம் திகதிய கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் 31/99 இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் ஊழியர் சம்பள உயர்வை உரிய முறையில் சுற்று நிருபத்திற்கமைய நடைமுறைப்படுத்த வேண்டும்.

ஆளணி நிர்ணயம் செய்யப்பட்ட பணியாளர்களுக்கு அவர்கள் தற்காலிகமாக நியமிக்கப்பட்ட பொழுது வழங்கப்பட்ட நியமனக் கடிதத்தின் அடிப்படையில் அத்தினத்திலிருந்து முதலாவது வருட முடிவில் சம்பள உயர்வையும்,சம்பள உயர்வு நிலுவையையும் சகபணியாளர்களுக்கு வழங்கப்பட்டது போன்று வழங்க வேண்டும் ஆகிய கோரிக்கைகளும் முன்வைக்கப்பட்டுள்ளன. (உ-52)

## கடலில் வீரச்சாவடைந்த 11 புலிகளுக்காக

# வவுனியாவில் ஹர்த்தால் அனுட்டிப்பு இயல்பு நிலை முற்றாகப் பாதிப்பு!

(வவுனியா)

சர்வதேசக் கடற்பரப்பில் கடந்த திங்கட்கிழமை தமிழீழ விடுதலைப் புலிகளின் கப்பலை இலங்கைக் கடற்படை தாக்கியழித்த சம்பவத்திற்கு ஆட்சேபம் தெரிவிக்கும் முகமாக வவுனியா நகரில் நேற்று முன்தினம் பூரண ஹர்த்தாலும் துக்கதினமும் அனுட்டிக்கப்பட்டது.

வவுனியா மாவட்ட வெகுஜன அமைப்புகளின் ஒன்றியத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இக்ஹர்த்தாலினால் வவுனியா நகரின் இயல்பு நிலை முற்றுமுழுதாக பாதிக்கப்பட்டிருந்தது.

அத்துடன், கடலில் காவியமான 11 போராளிகளிற்கும் அஞ்சலி செலுத்தும் வகையில் வவுனியா நகரெங்கும் கறுப்புக் கொடிகள் பறக்க விடப்பட்ளடிருந்தன.

ஓமந்தை சோதனைச்சாவடி வழமை போல் திறந்திருந்த போதும் பயணிகள் குறைந்த அளவிலேயே போக்குவரத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இதேவேளை வவுனியா நகரில் உள்ள அனைத்துக் கடைகளையும் திறக்கும்படியும் தாம் பூரண பாதுகாப்பு வழங்குவதாகவும் பொலிஸார் நேற்றுக் காலை வர்த்தகர்களுக்கு ஒலிபெருக்கி மூலம் அறிவித்திருந்தனர்.

ஆயினும், வர்த்தக நிலையங்கள் எதுவும் திறக்கப்படவில்லை. பாடசாலைகள் மற்றும் அரச செயலகங்கள் யாவும் செயலிழந்து காணப்பட்டன. (உ-10)

# 'பொடா' சட்டத்தை மறு பரிசீலனை செய்யக் குழு

### மத்திய அரசு அமைத்தது

(புதுடில்லி)

பயங்கரவாதத்துக்கெதிரான 'பொடா' சட்டத்தை மறு பரிசீலனை செய்து அதனை அமுல்படுத்துவதிலுள்ள குறைபாடுகளை நீக்கிக் கொள்வதற்கு ஆலோசனைகளைக் கூறும் முகமாக குழுவொன்றை மத்திய அரசு அமைத்துள்ளது.

இதனை நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் துணைப்பிரதமர் எல்.கே.அத்வானி அறிவித்தார்.

'பொடா' சட்டம் தவறாகப் பயன்படுத்தப்படாமலும் மனித உரிமைகள் மீறப்படாமலும் பாதுகாத்துக் கொள்வதே இந்த மறுபரிசீலனையின் நோக்கம் என்று அத்வானி கூறியுள்ளார்.

இக் குழுவுக்கு பஞ்சாப் ஹரியானா உயர்நீதிமன்றத்தின் முன்னாள் தலைமை நீதிபதி அருண்சகாரியா தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

'பொடா' சட்டம் சில மாநிலங்களில் தவறாகப்பயன்படுத்தப்படுவது குறித்து பரவலாகக் குரல் எழுப்பப்பட்டு வருகின்றது.

குறிப்பாகத் தமிழ் நாட்டில் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் வை.கோவும் அவரது சகாக்களும் 'பொடாச்' சட்டத்தின் கீழ் பல மாதங்களாகக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். இதே சட்டத்தின் கீழ் புலவர் நெடுமாறனும வேறு பலரும் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த நடவடிக்கைகளை எதிர்த்து வரும் 29ஆம் திகதி தமிழ் நாட்டில் உண்ணாவிரதப்போராட்டம் நடத்த தி.மு.கழகமும் வேறுபலகட்சிகளும் தீர்மானித்துள்ளன. (பி-2)

### இலக்குகளைத் துல்லியமாகத் தாக்கும் ஏவுகணைகளுடன்

# 10கப்பல்கள் கொண்ட ஓர் அணியை செங்கடலுக்கு நகர்த்துகிறது அமெரிக்கா

(வாஷிங்டன்)

வெகுதூரம் சென்று இலக்குகளைத் தாக்கக் கூடிய 'ரொமாஹறாங்க்' ஏவுகணைகள் பொருத்தப்பட்ட 10கடற படைக்கப்பல்களைக் கொண்ட ஓர் அணியை அமெரிக்கா கிழக்கு மத்திய தரைக்கடற்பகுதியிலிருந்து செங்கடல்பகுதிக்கு நகர்த்தத் தொடங்கியிருக்கிறது.

துருக்கி தனது நிலப்பரப்புக்கு மேலாக அமெரிக்க விமானங்களும் ஏவுகணைகளும் பறந்து செல்லும் உரிமையை வழங்கமாட்டாது என்பதாலேயே அமெரிக்கா இந்தக் கப்பல் நகர்வை மேற்கொள்வதாகக் கருதப்படுகின்றது.

செங்கடலிலிருந்து அமெரிக்கக் கப்பல்கள், நாசகாரிகள், நீர்மூழ்கிகள் ஏவுகணைகளைச் செலுத்துவது வசதியாகவிருக்கும் என்று கருதப்படுகின்றது. யுத்தத்தின் ஆரம்பக்கட்டத்தில் சவூதிஅரேபிய வான் பரப்புக்கு மேலாக இந்தத் தாக்குதல் நடத்தப்படக்கூடும்.

ஈராக்கிற்கு எதிராக யுத்தம் ஒன்று ஏற்படலாம் என்ற எதிர்ப்பார்ப்புடன் யுஎஸ்எஸ்ஹறிஎஸ்ட்ருமன், யுஎஸ்எஸ் தியடோர் ரூஸ் வெல்ட் ஆகிய விமானம்தாங்கிக் கப்பல் அணிகள் இதுவரை மத்திய தரைக்கடற் பகுதியில் நிலைகொண்டிருந்தன. இவைகளில் ஒரு பகுதியே செங்கடல் பகுதிக்கு நகர்த்தப்படுகின்றன.

இந்த விமானந்தாங்கிக் கப்பல்கள் ஒவ்வொன்றிலும் சுமார் 80விமானங்கள் தரித்துள்ளன.

மக்கள் செறிந்தவாழும் பகுதிகளில் உயிரிழப்புகள் அதிகம் ஏற்படாத வகையில் அரசகட்டடங்கள் போன்ற அதி பெறுமதியான இடங்கள் மீது துல்லியமாகத் தாக்குதற்காகவே விண்கல வழிகாட்டலுடன் ரொமாஹல்க்ஸ் ஏவுகணைகள் பெரும்பாலும் பயன்படுத்தப்படும்.

1980ஆண்டுகளில் நடுப்பகுதியில் வடிவமைக்கப்பட்ட இந்த ஏவுகணைகள் நிலத்தில் அல்லது நீரின் மீது நிறுவப்பட்டுள்ள ரோடர்களுக்குப்புலப்படாத வகையில இலக்குகளைச் சென்றடையக் கூடியவை. (பி)

# ரயிலில் குண்டு வெடிப்பு 12 பேர் பலி; 75 பேர் காயம்

(புதுடில்லி)

இந்தியாவின் பம்பாய் நகரில் பயணிகள் நிறைந்திருந்த மின்சார ரயிலில் குண்டொன்று வெடித்ததில் 12பேர் கொல்லப்பட்டதுடன், 75 பேர் காயமுற்றார்கள்.

கொல்லப்பட்டவர்களில் மூவர் பெண்கள். பம்பாய் தொடர் குண்டு வெடிப்பு இடம்பெற்ற 10வது ஆண்டு நிறைவு முடிவுற்ற அடுத்த நாள் அன்று இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

10ஆண்டுகளுக்கு முன்னர் இடம்பெற்ற பம்பாய் தொடர் குண்டு வெடிப்பில் 250 பேர் கொல்லப்பட்டார்கள். (பி-9)

# அமெரிக்க டொலருக்காக காட்டிக் கொடுத்தவர்

(நியுயோர்க்)

அல்கெய்டா இயக்கத்தின் முக்கிய தளகர்த்தரான காலிஸ் ஷேக் முஹமத்தை, அமெரிக்கா அறிவித்த ரூபா 12.5கோடி பரிசுக்காகக் காட்டிக் கொடுத்திருக்கிறார் எகிப்து நாட்டைச் சேர்ந்த அல்கெய்டா தொண்டர். பாகிஸ்தானின் குவெட்டா நகரில், அல்கெய்டாவின் தளம் ஒன்றை அமெரிக்க, பாகிஸ்தானிய இராணுவ அதிகாரிகள் கூட்டாக சோதனையிட்டனர். அப்போது ஒருவர் சிக்கினார். (அவருடைய பெயரை அமெரிக்க அரசு வெளியிட மறுத்து விட்டது)எகிப்து நாட்டைச் சேர்ந்த அவர் அல்கெய்டாவின் முக்கிய புள்ளி.

ஐந்து வாரங்களுக்கு முன்பும் குவெட்டோவில் உள்ள அந்த இடம் குறித்து அமெரிக்க,பாகிஸ்தானிய உளவுப் பிரிவுக்குத் துப்புக் கிடைத்தது. அவர்கள் அங்கு சென்ற போது காலிஸ்ஷேக் முகம்மது அங்கே இல்லை. ஆனால் முகம்மது அப்துல் ரஹ்மான என்பவர் சிக்கினார். அவருடைய தகப்பனார் ஷேக் உமர் அப்துல் ரஹ்மான் என்பவர் கண்பார்வையற்ற மதப் போதகர். எகிப்து நாட்டைச் சேர்ந்தவர். நியுயோர்க் நகரின் முக்கிய அடையாளச் சின்னங்களைக் குண்டு வைத்துத் தகர்க்க சதி செய்ததாக ஷேக் உமர் அப்துல் ரஹ்மான் ஏற்கனவே கைது செய்யப்பட்டிருக்கிறார்.

அதேசமயம் முஹம்மது அப்துல் ரஹ்மானுடன் இன்னொருவரும் சிக்கினார். அவர் முக்கியமான பொறுப்பில் இல்லாவிட்டாலும் ஹாலிஷேக்கைக் காட்டிக் கொடுக்க முனவந்தார்.

காட்டிக் கொடுப்பதற்கு அமெரிக்க அரசு தரும் கூலி போதாது. பிரிட்டனில் தானும் தனது குடும்பத்தினரும் பத்திரமாக வாழ மேற்கொண்டு 20லட்சம் டொலர்கள் தர வேண்டும் என்று கோரினார்.

எத்தனை முறை எப்படி விசாரித்தாலும் அவரிடம் இருந்து உண்மையை வரவழைக்க முடியாததால் சோர்ந்து போன அமெரிக்க அதிகாரிகள் அவர் கேட்ட படியே பணம் கொடுக்க சம்மதித்தனர். அதன் பிறகே ஹாலிக் ஷேக் முஹம்மதை அவர்களால் பிடிக்க முடிந்தது. (பி)

# படுகொலைகளைத் தடுக்காத தளபதிக்கு 5ஆண்டு சிறை

(ஜகார்த்தா)

கிழக்கத் திமோரில் படுகொலைகளைத் தடுக்கத் தவறிய குற்றத்திற்காக இந்தோனேஷிய படைத்தளபதி ஒருவருக்கு 5ஆண்டுகள் சிறைத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

1999ஆம் ஆண்டு கிழக்குத் தீமோரில் இடம்பெற்ற பொது ஜனவாக்கெடுப்பின் போது ஆயிரத்துக்கும் அதிகமான பொது மக்கள் படுகொலை செய்யப்பட்டதை அப்போதைய படைத் தளபதி நொஜிமியூஸ் தடுக்கத் தவறியுள்ளார் என்று ஜகர்த்தா நீதிமன்றம் குற்றம் சாட்டியுள்ளது.

இந்தப் படைத்தளபதி ஆயுதக் குழுக்களை கிழக்குத் தீமோரின் நகரங்களில் எவ்வித தடைகளுமின்றி அனுமதித்ததாகவும்;

1999ஆம் ஆண்டு தேவாலயம் ஒன்றிலும் பேராயர் ஒருவரின் இல்லத்திலும் படுகொலைச் சம்பவங்களை மேற்கொள்ள அனுமதித்துள்ளார் என்றும் நீதிமன்றம் தனது தீர்ப்பினைத் தெரிவித்துள்ளது.

இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டாலும் அதனை எதிர்த்து மேன் முறையீடு செய்ய சம்பந்தப்பட்ட படைத்தளபதிக்கு கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

இந்தோனேஷிய சட்டங்களின் அடிப்படையில் மேன் முறையீட்டு வழக்குகளை விசாரணை செய்ய பல வருடங்களாகும் என்றும் இதனால் நொஜிமியூஸ் உடனடியாகச் சிறைக்கு அனுப்பப்படுவது சந்தேகம என்றும் ஆய்வாளர்கள் கருத்துக் கூறியுள்ளனர். (பீ-2)

# மைக்கல் ஜக்சனை நஷ்ட ஈடு வழங்க உத்தரவு

(வாஷிங்டன்)

பொப் இசைப் பாடகர் மைக்கல் ஜாக்சனுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்த ஜேர்மன் விழா ஏற்பாட்டாளர் ஒருவருக்கு 53லட்சம் டொலர்களை இழப்பீடாக வழங்குமாறு கலிபோர்னிய நீதி மன்றம் ஜாக்சனுக்கு உத்தரவிட்டுள்ளது.

புத்தாயிரமாம் ஆண்டு ஆரம்பித்த சமயத்தில் பல நிகழ்ச்சிகளை நடத்த ஒப்புக்கொண்ட மைக்கல ஜாக்சன் அவற்றை ரத்துச் செய்து விட்டார் எனக் கூறி விழா ஏற்பாட்டாளர் வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.

மார்ஷில் அஹ்ரப் என்ற இந்த ஏற்பாட்டாளர் இரண்டு கோடி டொலருக்கும் அதிகமான தொகையை இழப்பீடாகக் கேட்டிருந்தார்.

1999ஆம் ஆண்டு தமது ஒப்பந்தங்கள் குறித்த பிரச்சினைகள் அடிப்படையில் தொடர் நிகழ்ச்சிகளில் இருந்து மைக்கல் ஜக்சன் பின் வாங்கியிருந்ததால் சுமார் 60லட்சம் டொலர் நஷ்டம் ஏற்பட்டிருந்தது என்று அவர் கூறியிருந்தார். (பி-2)

# அமெரிக்காவை குறிவைக்கும் பெண் மனித குண்டுகள்

(துபை)

அமெரிக்காவைக் குறிவைத்து தாக்க பெண்களே மனித வெடி குண்டுகளாக செயற்படக் கூடிய படையை அல்கொய்டா அமைத்துளளது. அவர்கள் தாங்கள் எதை எப்போது செய்ய வேண்டும் என்ற கட்டளையை ஒஸாமா பின்லேடனிடமிருந்து இணையத்தளம் மூலமே பெறுகின்றனர்.

சவூதியைச் சேர்ந்தவருக்குச் சொந்தமான "அஷார்க் அல்அவ்ஷாத்" என்ற பத்திரிகை உம் ஒஸாமா "என்ற பெண் போராளியை பேட்டி கண்டு இச்செய்தியை பிரசுரித்துள்ளது. உம் ஒஸாமா என்றால் ஒஸாமாவின் தாய் என்று பொருள்.

அவரது பேட்டி வருமாறு,

அமெரிக்காவே எங்கள் இலக்கு. ஒஸாமா பின்லேடன் எங்களுக்கு நேரடியாகக் கட்டளை இடுகிறார். அவை இணையத்தளம் மூலம் முல்லா ஒருவர் மூலம் பெறப்பட்டு எங்களுக்குத் தெரிவிக்கப்படுகிறது.அல்கெய்டா தலிபான் இயக்கங்களில் உள்ள எங்கள் சகோதரர்கள் இக்கட்டளைகளைத் தெரிவிக்கின்றனர். எங்களுக்குள் நாங்கள் இணையத்தளம் மூலம் தான் பெரும பாலும் பேசிக் கொள்கின்றோம்.

எங்கள் தலைவர் இடும் கட்டளைக் கேற்ப, அமெரிக்காவிற்கெதிராக உரிய பெரிய தாக்குதல்களிற்கு எங்களைத் தயார் படுத்தி வருகின்றோம். இத்தாக்குதலுக்குப் பிறகு உலக வர்த்தக மையத்தின் மீது 2001 செப்ரம்பர் 11-இல் நடத்திய தாக்குதல் மறந்தே போகும்.

பலஸ்தீனத்தில் இஸ்ரேலால் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளை மீட்க பலஸ்தீனத்தைச் சேர்ந்த எங்கள் சகோதரிகள் மனித வெடி குண்டுளாக பயனபட்ட தியாக வரலாறுதான் எங்களையும் மனித வெடி குண்டுகளாக பணியாற்றத் தூண்டியது. (பி)

### பஞ்சத்தில் வாடும்

# வடகொரியாவுக்கு தென்கொரிய அரிசி

(சியோல்)

பஞ்சத்தில் வாடும் வடகொரியாவுக்கு 4 லட்சத்து 32ஆயிரம் தொன் அரிசியை கடனாக வழங்கப் போவதாக தென்கொரியா அறிவித்துள்ளது.

அத்துடன் 2004ஆம் ஆண்டும் 2005ஆம் ஆண்டும் வடகொரியாவிற்கு அரிசியை அனுப்பி வைக்கவுள்ளதாக தென்கொரிய விவசாய அமைச்சு கூறியுள்ளது.

தென்கொரியா கடந்த வருடம் 4லட்சம் தொன் அரிசியையும் 2000 ஆம் ஆண்டு 3லட்சம் தொன் அரிசியையும் வடகொரியாவுக்கு வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.(பி-2)

# பிரிட்டன் விதித்த நிபந்தனைகள்

## பிரான்ஸ், ரஷ்யா, சீனா நிராகரிப்பு

(மொஸ்கோ)

ஈராக் ஆயுதங்களை களைவதற்கு 6நிபந்தனைகளை விதிக்கும் பிரிட்டனின் புதிய யோசனையை பிரான்ஸ், ரஷ்யா, சீனா ஆகிய மூன்று நாடுகளும் நிராகரித்துள்ளன.

ஈராக்கின் பேரழிவுகளை ஏற்படுத்தும் ஆயுதங்களை அழிப்பதற்கு நடைமுறைக்கு ஏற்றவகையில் காலகெடுதரப்பட்டவில்லை என்று பிரான்ஸ் வெளிவிவகார அமைச்சர் டொமினிக் டிவிலிப்பின் கூறியுள்ளார் புதிய தீர்மானம் குறித்து பேச்சுவார்த்தை நடைபெற்றுவருவதால் எந்த விதத்தில் வாக்களிப்பது என்று ரஷயா இன்னும் முடிவு எடுக்கவில்லை.

எனினும் அது ஈராக்கை தாக்க ஒருபோதும் அனுமதி அளிக்காது என்று ரஷ்ய வெளிவிவகார அமைச்சர் இசோ இவானோ கூறியுள்ளார்.

சீனா வெளியுறவு அமைச்சருடன் செய்தித் தொடர்பாளர் பேசுகையில் ஈராக் குறித்த இரண்டாவது தீர்மானம் தேவையற்றது என்றார்.

முதலாவதுதீர்மானத்திற்கு அமையவே ஆயுத ஆய்வு தொடரப்பட வேண்டும் என்று அவர் வலியுறுத்தியுள்ளார். (பி)

# கிழக்காபிரிக்கத் துறை முகங்கள் மீது அல்கெய்டா கண் வைத்துள்ளது

### அமெரிக்கா எச்சரிக்கை

(வாஷிங்டன்)

அல்கெய்டா போன்ற தீவிரவாத இயக்கங்கள் கிழக்காபிரிக்க துறை முகங்கள் மீது தாக்குதல் நடத்தக் கூடும் என்று அமெரிக்கா எச்சரிக்கை விடுத்துள்ளது.

நைரோபி உட்பட கென்னியாவில் தோளில் வைத்துச் சுடும் ஏவுகணைகள் மூலம் தீவிரவாதிகள் விமானங்கள் மீது தாக்குதல் நடத்தும் அச்சுறுத்தல் தொடர்கிறது.அத்துடன் துறைமுகங்களும் இலக்கு வைக்கப்படலாம்.

ஏனைய கிழக்காபிரிக்க நாடுகளிற்கும் இதே அச்சுறுத்தல் உள்ளதாக அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் கூறியுள்ளது.

கிழக்காபிரிக்காவில் தீவிரவாதிகள் தொடர்ந்தும் இயங்கி வருவதாக இராஜாங்கத் திணைக்களத்திற்கு தகவல் கிடைத்து வருவதாகவும் அங்குள்ள அமெரிக்கர்கள் அவதானமாக இருக்க வேண்டும் என்றும் இராஜாங்கத் திணைக்களம் கேட்டுள்ளது.(பி-9)

### யுத்தத்தை தவிர்க்க பாகிஸ்தான் வலியுறுத்து

(இஸ்லாமபாத்)

ஈராக் விவகாரத்திற்கு சமாதான தீர்வு காண்பதுடன் யுத்தத்தை தவிர்த்துக் கொள்ள சர்வதேச சமூகம்மேலும்கால அவகாசத்தை வழங்க வேண்டும் என்று பாகிஸ்தான் வலியுறுத்தியுள்ளது.

சமாதானத்திற்கு முறையான வாய்ப்பொன்று வழங்கப்பட வேண்டும் என்று பாகிஸ்தான் நம்புவதாக பிரதமர் ஜவருள்ளா ஹான் ஜமாலி வெளிநாட்டு நிருபர் ஒருவரிடம் பேசிய போது தெரிவித்துள்ளார்.

## புலிகளின் கப்பல் தாக்கி அழிப்பால்

# தேக்கம் அடைந்திருக்கும் சமாதான முயற்சிகள் ஊக்கம் பெற வேண்டும்

## தமிழ்க்கட்சிகள் ஒருமித்த கருத்து

(கொழும்பு)

**முல்லைத்தீவுகடல் பகுதியில் விடுதலைப்புலிகளின் கப்பல் தாக்கியழிக்கப்பட்டதைத் தொடர்ந்து, மக்கள் மத்தியிலும், அரசியல்கட்சிகள் மத்தியிலும் சமாதானம் குறித்த அவநம்பிக்கை ஏற்பட்டுள்ளது. எனினும், பேச்சுவார்த்தைகள் முறிவடைந்துவிடாது தொடர்ந்தும் முன்னெடுக்கப்படவேண்டும்.**

இவ்வாறு தமிழ்க் கட்சிகள் ஒருமித்த குரலில் கருத்து வெளியிட்டிருக்கின்றன.

கடந்த ஒருவருடகாலமாக பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவினாலும், தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வேபிரபாகரனாலும் முன்னெடுதுச் செல்லப்படும் சமாதான முயற்சிகள், யுத்த நிறுத்த மீறல் சம்பவங்களினால் தடைப்பட்டு விடக்கூடாதென தமிழர் விடுதலை கூட்டணியின் சிரேஷ்ட உபதலைவர் ஜோசப் பரராஜசிங்கம் தெரிவித்துள்ளார்.

வெளிநாடுகளில் நடந்து முடிந்த 5 சுற்றுப் பேச்சுவார்த்தைகள் போன்று, பேச்சுக்கள் சுமுகமாக தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதே தமிழ் மக்களின் எதிர்பார்ப்பு என அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் தலைவர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி கோரியுள்ளார்.

பொதுஜனஐக்கிய முன்னணி ஆட்சியில் இருந்த போது ஆரம்பிக்கப்பட்ட பேச்சுவார்த்தை யுத்தநிறுத்த மீறல் சம்பவங்களினால் இடைநிறுத்தப்பட்டன. இவ்வாறானதொரு சூழ்நிலை மீண்டும் ஏற்படாதவாறு இருதரப்பும் பரச்சினைகளை கையாளவேண்டும எனவும் அவர் அபிப்பிராயம் தெரிவித்துள்ளார்.

இலங்கைத்தொழிலாளர் ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான எஸ். சதாசிவம் விடுத்துள்ள அறிக்கையில்,

தற்போது நாட்டில் ஏற்பட்டிருக்கும் சமாதானச் சூழ்நிலை நிரந்தரமானதாக இருக்க வேண்டும என்பதே சகல இன மக்களினதும் எதிர்பார்ப்பு.

சில அரசியல் கட்சிகள் இச்சமாதானத்தை குழப்பும் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றன. இதனை உணர்ந்து அரசும், விடுதலைப் புலிகளும் செயற்படுவது அவசியமாகும.

மீண்டும் ஒரு யுத்தத்தினை ஆரம்பிக்க மக்கள் ஒரு போதும் இடமளிக்கமாட்டார்கள். இதனை சகல தரப்பினரும் உணர்ந்து கொள்ள வேண்டும் என அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ-8)

### கூட்டம்

(தென்மராட்சி)

சிறுவர் பாதுகாப்பு நிறுவனத்தின சிறுவர் கழக இணையக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு நல்லூர் மங்கையற்கரசி பெண்கள் தமிழ்க்கலவன் பாடசாலையில் நடைபெறவுள்ளது. (உ-77)

### சங்காபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

மாதனை ஸ்ரீ காளியம்மன் தேவஸ்தான மண்டலாபிஷேக பூர்த்தி தின நவேந்திர ஸஹஸ்ர சங்காபிஷேக விஞ்ஞாபனம் இன்று சனிக்கிழமை நண்பகல் 11 மணிக்கு நடைபெற வுள்ளது. அதனைத்தொடர்ந்து பி.ப 5 மணிக்கு திருக்கல்யாணமும் திருஊஞ்சலும் இடம்பெறும். (இ-5)

### கஜேந்திரகுமார் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப்பல்கலைக்கழகத்தில் வேலைநிறுத்தப்போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் ஊழியர்களை தமிழர் தேசிய கூட்டமைப்புப் பாராளு மன்ற உறுப்பினரான பொன்னம் பலம் கஜேந்திரகுமார் நேற்று முன்தினம காலை சந்தித்து பேசியுள்ளார்.

இதேவேளை, 12வது நாளாக நீடித்து வரும் இப் போராட்டம் காரணமாக நேற்று முன்தினம் கலைப்பீடாதிபதி அலுவலகமும் மூடப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

இது இவ்வாறிருக்க பல்கலைக் கழக நிர்வாகப் பகுதி கடமைகளும தடைப்பட்டுள்ளன. (உ-77)

### தடகள விளையாட்டுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

கோப்பாய்ப் பிரதேச செயலக பிரிவிற்குள் அடங்கும் விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான தடகள விளையாட்டுப் போட்டி எதிர்வரும் 18ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு அத்தியார் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

அன்றையதினம் காலை 6.30 மணிக்கு மரதன் ஓட்டம், சைக்கிள் ஓட்டம் என்பன கோப்பாய் பிரதேச செயலகத்திலிருந்து ஆரம்பமாகவுள்ளன.

பதிவு செய்யப்பட்டகழகங்கள் பங்குபற்ற விரும்பும் அங்கத்தவாகள் பெயர்களைச் சமர்ப்பிக்கும்படி கோப்பாய் பிரதேச செயலர் செ. ஸ்ரீநிவாஸன் கேட்டுள்ளார். (உ)

### கரபந்தாட்ட மத்தியஸ்தர் செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ். கரபந்தாட்டச் சங்க ஏற்பாட்டில் சிறந்த கரபந்தாட்ட மத்தியஸ்தர்களை உருவாக்கும் பொருட்டிலான விரிவுரைகள் மற்றும் செயலமர்வுகள் இன்றும் நாளையும யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரியில் இடம்பெறவுள்ளன.

இப்பயிற்சிப் பட்டறைகளை நடத்துவதற்கென இலங்கை கரபந்தாட்டச் சங்கத்தைச் சேர்ந்த சர்வதேச தரம் வாய்ந்த பயிற்றுநர்களான வி.வி.குணரத்தின, எம்.ஏ.பி. செனவிரட்ண, எல். டபிள்யு அமரசிங்க ஆகியோர் யாழ்ப்பாணம் வந்துள்ளனர். (உ)

### அமெரிக்கா யுத்தக்கப்பல் வழங்குவதற்கு

## கூட்டமைப்பு தலைவர்கள் வன்மையான கண்டனம்

(கொழும்பு)

உலங்குவானூர்தி இறக்கும் ரோந்துப்பணியில் ஈடுபடும் நவீனரக யுத்தக்கப்பல் ஒன்றை அமெரிக்கா இலங்கைக்கு வழங்கவிருப்பதை தமிழ் தேசியக்கூட்டமைப்பு தலைவர்கள் வன்மையாகக் கண்டித்துள்ளனர்.

அரசுக்கும், விடுதலைப்புலிகளுக்குமிடையில் சமாதானப்பேச்சு வார்த்தைகள் நடைபெற்றுவரும் சமாதான சூழலில் இத்தகைய நவீனரக யுத்தக் கப்பலை இலங்கைக்கு அமெரிக்கா வழங்க முடிவுசெய்திருப்பதானது சமாதானப பேச்சுவார்த்தையை குழப்புவதாக அமையும் என்று தமிழ்க் கூட்டமைப்புத் தலைவர்களான அ.விநாயக மூர்த்தி, செல்வம் அடைக்கலநாதன், சுரேஸ்பிரேமச் சந்திரன் ஆகியோர் இவ்வாறு கருத்து வெளியிட்டுள்ளனர். (வ)

## பாலேந்திரா பயிற்சிக்கல்லூரியில் சான்றிதழ் வழங்கும் வைபவம்

### பிரதம அதிதி கேணல் கருணா அம்மான்

(மட்டக்களப்பு)

லெப்ரினட் கேணல் பாலேந்திரா பயிற்சிக்கல்லூரியில் 2ம் லெப்ரினட் தரத்திலான கற்கை நெறியினை பூர்த்தி செய்தவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் வைபவம் நேற்று முன்தினம் கரடியனாறு தேனகத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்விற்கு, பிரதம விருந்தினராக விடுதலைப் புலிகளின் கிழக்கு மாகாண மூத்த தளபதி கேணல் கருணா அம்மான் கலந்து கொண்டார்.

கல்லூரியின் அதிபர் எஸ். உதயகுமார் தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வில் மட்டக்களப்பு-அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி ரமேஸ், மகளிர் சிறப்புத்தளபது நிலாயினி உட்படபல தளபதிகள் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில், 89 போராளிகளுக்கு 2ம் லெப்ரினட தரத்திலான கற்கை நெறிக்கு சான்றிதழ்களை கேணல் கருணா அம்மான் வழங்க அவர்களிற்கான பதக்கங்களை ஒவ்வொரு போராளிகளினதும் பெற்றோர் தமது பிள்ளைகளுக்கு சூட்டினர்.


இதேவேளை, இந்நிகழ்வு தமிழீழத்தில் நடந்த முதலாவது நிகழ்வு என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (இ-5)

## பொருளாதார அபிவிருத்தி ஆ.கு. தலைவராக லலித் கொத்தலாவல

(கொழும்பு)

வடமேல் மற்றும் மத்திய மாகாணங்களின் முதலீட்டுச் சபையின் பொருளாதார அபிவிருத்தி ஆணைக் குழுத் தலைவராக தேசமான்ய லலித் கொத்தலாவல அண்மையில் பிரதமரால் நியமிக்கப்பட்டுள்ளார்.

பொருளாதார, அபிவிருத்தி நடவடிக்கைகளை மாவட்டம் தோறும் விஸ்தரிக்கும் நோக்கில் பிரதமர் மேற்படி ஆணைக்குழுக்களை அமைத்து வருவது குறிப்பிடத்தக்கது. (உ)



யாழ.நகா கிழக்கு சமுாத்தி வங்கி அண்மையில கொழும்புததுறையில திறநது வைக்கப்பட்டது. சமுர்த்தி உதவி ஆணையாளர் என். சிவபாத சுந்தரம் உரையாற்றுவதையும் யாழ். பிரதேச செயலர் பா. செந்தில்நந்தனன், சீ.வீ.கே. சவஞானம், வடமாகாண கடற்தொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் தலைவர் எஸ். தவரட்ணம், வங்கி கட்டுப்பாட்டுசசபை தலைவர் அ. யேசுதாசன் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படத்தில் கணலாம்.



குருநகர் சென்.ஜேம்ஸ் மகாவித்தியாலய தரம் 1 மாணவர்களின் கால்கோள் விழாவுக்கு பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட அருட்கலாநிதி எஸ். அருட்செல்வன் அடிகளாரை அதிபர் எஸ்.எஸ். தங்கராசா மற்றும் ஆசிரியர்கள் அழைத்து வரும்போது எடுக்கப்பட்ட படம். (குருநகர் நிருபர்)



கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகளை இளைப்பாறிய உடற்கல்வி உதவிப் பணிப்பாளர் எஸ். பாலசுப்பிரமணியம் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதையும் பிரதம வருந்தினராக கலந்து கொண்ட கரவெட்டி பிரதேச செயலர் என். கனகரத்தினம் மற்றும் அதிபர் ஆர். இராகவன் ஆகியோரையும் காணலாம். (படம்: பரு.நிருபர்)

## திருமலை தமிழ்ப் பகுதிகளில் நேற்றுப் பூரண ஹர்த்தால்

(திருகோணமலை)

திருகோணமலை தமிழ்ப் பிரதேசங்களில் நேற்று பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

நெடுந்தீவு கடற்பிரதேத்திலும், முல்லைத்தீவு கடற்பிரதேசத்திலும் தமிழீழ விடுதலைப்புலிகளின் கப்பல்கள்தாக்கி அழிக்கப்பட்டதை கண்டித்தும், அவசரகால மற்றும் பயங்கரவாத தடைச்சட்ட்ங்கள் நீக்கப்பட்டும் தமிழ்அரசியல் கைதிகள சிறைகளில் அடைக்கப்பட்டிருப்பதை கண்டித்தும், களுத்துறை கைதிகளுக்கு ஆதரவு தெரிவித்தும், பொதுஜனஐக்கிய முன்னணி, மக்கள் விடுதலை முன்னணி என்பன இணைந்து நடத்தும் சமாதானத்துக்கு எதிரான நடவடிக்கைகளைக் கண்டித்தும் இக் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

இதனால் திருகோணமலை தமிழ்ப் பாடசாலைகள், அரச திணைக்களங்கள், வங்கிகள், வர்த்தக நிலையங்கள், போக்குவரத்துகள் என்பன முற்றாக ஸ்தம்பிதம் அடைந்துள்ளன.

இதேவேளை, திருகோணமலை சிங்களப்பிரதேசம் மற்றும் முஸ்லிம் பிரதேசங்கள் வழமை போல இயங்கிக் கொண்டிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது. (உ-8)

# தமிழீழ வைப்பக கிளை பளையில் நேற்று திறப்பு



கிளி. வலய கல்விப்பணிப்பாளர் அரியரத்தினம் சுடர் ஏற்றுகிறார்.

அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச் செல்வன் தேசியக் கொடி ஏற்றுகிறார்.



நிகழ்வில் கலந்து கொண்டோ



அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் வைப்பகத்தை நாடாவெட்டி திறந்து வைக்கிறார்.




திறந்து வைக்கப்பட்ட புதிய வங்கிக் கட்டடம்



அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் உரையாற்றுகிறார்.



நிகழ்வில் கலந்து கொண்ட முக்கிய பிரமுகர்கள்

## சமாதான நீதிவான்கள் நியமனம்

(கொழும்பு)

பிறப்பு, இறப்பு, திருமணப்பதிவாளர்களுக்கு சமாதான நீதிவான் பதவிகளை வழங்க அரசு துரித நடவடிக்கை எடுத்துள்ளதாக உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சர் அலுக் அலுவிகார தெரிவித்துள்ளார்.

பிறப்பு, இறப்பு, திருமணப்பதிவுகளை மேற்கொள்ளுபவர்கள் தற்போது பணியாற்றும் பிரதேசத்திலேயே சமாதான நீதிவான்களாக நியமிக்கப்படுவார்கள் என்றும்,

இந்த நியமனங்கள் உடனடியாக அமுலிற்கு வரவுள்ளது எனவும் அமைச்சர் அலுக் அலுவிகார தெரிவித்துள்ளார். (உ-10)

## விளையாட்டுப் போட்டி

(பருத்தித்துறை)

உடுப்பிட்டி சைவப்பிரகாசவித்தியாசாலையின் வருடாந்த மெய்வன்மைப போட்டி இன்று சனிக்கிழமை அதிபர் எம். மெய்யழகன் தலைமையில் பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில், யாழ். மாவட்டபாராளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் பிரதமவிருந்தினராகவும் பொது சுகாதாரப்பரிசோதகர் எஸ். புஸ்பகாந்தன் சிறப்பு விருந்தினரா கவும் கலந்து கொள்ளவுள்ளனர். (உ-52)

## அறிமுகவிழா

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் சி. சிறிஸ்கந்தராசாவின் "திருக்குறள் ஓவியத்தில் திகழும் வர்ண ஜாலங்கள்", "நகைச் சுவைக் கதம்ப்", "பஞ்சவர்ணக் கதம்ப்" ஆகிய நூல்களின் அறிமுக விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப 3 மணிக்கு சுன்னாகம் ஸ்ரீ கதிரமலை சிவன்கோயில் தேவஸ்தான மணி மண்டபத்தில் திருமதி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில், ஆசியுரையை கதிரமலைச சிவன் தேவஸ்தான பிரதமகுரு பிரம்ம ஸ்ரீ நா. சர்வேஸ்வரக் குருக்களும், நயப்புரைகளை வலம்புரி ஆசிரிய பீடத்தைச் சேர்ந்த க. துரைசிங்கம், சி.சரவணபவன் (சிற்பி), தேசிய இளைஞர் சேவைகள் மனற யாழ்ப்பாண உதவிப்பணிப்பாளர் சிவதட்சணாமூர்த்தி ஆகியோரும் நிகழ்த்தவுள்ளனர்.

சிறப்புரையினை ஆசிரியர் ஆறு திருமுருகன் ஆற்றவுள்ளார். (உ)

## மணல் விநியோகம் நிறுத்தம்

(பருத்தித்துறை)

வடமராட்சிகிழக்கு சுற்றுச் சூழல் பாதுகாப்புச்சங்கத்தின் மணல் விநியோகம் மறுஅறிவித்தல் வரை தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதாக சங்கத் தலைவர் கே. அழகராசா அறிவித்துள்ளார். (உ-52)

## மின்னிணைப்பு துரிதம்

(பருத்தித்துறை)

அளவெட்டி வடக்கு, பன்னாலைப் பகுதிகளுக்கு வெகுவிரைவில் மின்னிணைப்புகள் வழங்கப்படவுள்ளன.

இதற்கான நிர்மாண வேலைகள தற்போது நடைபெற்றுவருகின்றன.

இந்துகலாசார அமைச்சர் தி. மகேஸ்வரனின் முயற்சியால் இப்பகுதிகளுக்கான மின்னிணைப்பு வழங்கபடுவது குறிப்பிடத்தக்கது. (உ-52)

## சப்பாத்துகள் அன்பளிப்பு

(சில்லாலை)

பிரான்பற்று கல்வி மேம்பாட்டுப் பேரவையிடம், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் என். ரவிராஜ் 25 சோடி சப்பாத்துக்களை அண்மையில் அன்பளிப்புச் செய்துள்ளார்.

வறிய மாணவர்கள் இனம் காணப்பட்டு இச் சப்பாத்துக்கள் விநியோகிக்கப்படவுள்ளன. (உ-58)

## மீனவர் அ.அட்டை வழங்கல்

(குருநகர்)

குருநகர் கடற்றொழில் சங்க அங்கத்தவர்களுக்கான மீனவர் அடையாள அட்டைகள் இன்று முதல் விநியோகிக்கப்படவுள்ளன.

மேற்படி அடையாள அட்டைக்கு விண்ணப்பித்தவர்களை காரியாலய நேரத்தில் வந்து பெற்றுச் கொள்ளுமாறு சங்கத் தலைவர் எம். வின்சன்ஸஸ் தெரிவித்துள்ளார். (உ-74)

# தமிழீழ வைப்பகக் கிளை பளையில் நேற்றுத் திறப்பு

(பளை)

தமிழீழ வைப்பகத்தின் பளைக கிளைத் திறப்பு விழா நேற்று கிளை முகாமையாளர் கியுபேட் அன்ரனி தலைமையில் இடம்பெற்றது.

நிகழ்வில், பொதுச் சுடரினை கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ. அரியரத்தினமும், தமிழீழத் தேசியக்கொடியை தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழ்ச் செல்வனும், தமிழீழ வைப்பகக் கொடியை காவல்துறைப் பொறுப்பாளர் நடேசனும் ஏற்றிவைத்தனர்.

தொடர்ந்து வைப்பக பெயர்பலகையை கிளிநொச்சி அரசாங்க அதிபர் எஸ். ராசநாயகம் திரைநீக்கம் செய்து வைத்தார்.

வைப்பகக் கிளையை விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் நாடாவெட்டித் திறந்து வைத்தார்.

நிகழ்வில், திருமதி அடேல் பாலசிங்கம், தமிழீழ நிதித்துறைப பொறுப்பாளர் தமிழேந்தி மற்றும் பெருமளவு பொதுமக்கள் கலந்து கொண்டனர். (உ-4)

# மனித உரிமை ஆர்வலர் மீண்டும் வழக்குத் தாக்கல்

(கொழும்பு)

நீதிமன்ற அவதூறு குற்றச் சாட்டின் பேரில் தடுத்து வைக்கப்பட்டுள்ள மனித உரிமை ஆர்வலர் அன்ரனி இம்மானுவேல். பெர்னாண்டோ, வெலிக்கடைச்சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் இருவரால் தாக்கப்பட்டதாகக் கூறி மீண்டும் வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

தாக்கல் செய்த மேற்படி மனுவில் சிறைச்சாலை அத்தியட்சகர், சிறைச்சாலை ஆணையாளர் ஆகியோர் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

சிறைச்சாலை அதிகாரிகளான சனத்கிருஷாந்த, டபிள்யூ ஏ. பிரியசாந்த் ஆகியோரும் இதற்கு உடந்தையாக இருந்தனர் என மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் 10 இலட்சம் ரூபா இழப்பீட்டுத்தொகையையும் கோரியுள்ளார்.

மனித உரிமை ஆர்வலர் மீது ஏற்கனவே தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டின் பேரில் கடந்த மாதம் இருசிறைச்சாலை உத்தியோகத்தர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (உ-8)

# தமிழீழ வரலாற்றுத் தேர்வில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு இன்று பரிசில் வழங்கல்

(கிளிநொச்சி)

தமிழீழ வரலாறும், சமூகக்கல்வியும தேர்வில் சிறப்புத் தேர்ச்சி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு இன்று பி.ப. 1.30 மணிக்கு கிளிநொச்சி ம.வில் நடைபெறவுள்ளது.

வன்னிப் பெருநிலப்பரப்பு மாவட்டத்தில் பரிசு பெற்ற 9 மாணவர்க்கு 5 ஆயிரம் ரூபா பணப்பரிசைத் தமிழீழ வைப்பகம் வழங்கிச் சிறப்பிக்கவுள்ளது.

வலய மட்ட பரிசுகளையும் சான்றிதழ்களையும் தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவை வழங்கவுள்ளது.

இப்பரிசளிப்பு நிகழ்வில் வடக்கு கிழக்கு மாகாண மட்டத்தில் தமிழீழக கல்வி மேம்பாட்டுப் பேரவையால் உலக ஆசிரியர் நாளையொட்டி ஆசிரியர்களிடையே கடந்த ஆண்டு நடாத்தப்பட்ட தமிழ்மொழித் திறன் தேர்வில் பரிசு பெற்ற வன்னிப் பெருநிலப்பரப்பு ஆசிரியர்களுக்கான பரிசளிப்பும் கடந்த ஆண்டு நடைபெற்ற க.பொ. த. உயர்தரப் தேர்வில் வரலாறுப்பாடத்தில் மிக திறன் தேர்ச்சி பெற்ற வன்னிப் பெருநிலப்பரப்பு மாணவர்களுக்கான பரிசளிப்பும் இடம்பெறவுள்ளது. (உ)


# எழுத்தாளர் சபை

இளம்எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் பொருட்டும், இலை மறைகாயாக உள்ள எழுத்தாளர்களுக்கு களம் அமைத்துக் கொடுக்கும்நோக்கத்துடனும்,புதிய எழுத்தாளர்களை உருவாக்கும் எண்ணத்துடனும்

வலம்புரி - சங்குநாதம்

தனது அடுத்த பணியாக ;

எழுத்தாளர் சபையை அமைக்கவுள்ளது. இதில் உறுப்பினர்களாகச் சேர விரும்பும் ஆர்வமுடையவர்கள்,தங்கள் விண்ணப்பங்களை பின்வரும் முகவரிக்கு அனுப்பிவக்கவும்.

எழுத்தாளர் சபை
வலம்புரி
இல.15,வெள்ளாந்தெரு
யாழ்ப்பாணம்.

உங்கள் விண்ணப்பத்துடன் பின்வரும் கூப்பனைத் தவறாது இணைத்து அனுப்பவும்.

## வலம்புரி ~சங்குநாதம் எழுத்தாளர் சபை

அலுவலகப் பாவனைக்கு
அங்.இல :

முழுப்பெயர் :
தபால் முகவரி :
பிறந்த திகதி :
தே.அ.அ.இல :
புனைபெயர்(இருப்பின்):

## சிறுவிளம்பரம்

### இசைக் குறிப்புக்கள்

ஓர்கன், வயலின், புல்லாங்குழல், கிற்றார், வீணை, மெலோடிக்கா போன்ற ''இசைக்கருவிகளில்'' சினிமாப் பாடல்களை இசைக்கக் கூடியவாறு ''இசைக் குறிப்புக்கள்'' என்னும் புத்தகம் (பாகம் 1) வெளி வருகின்றது. S.S.றஜேந்திரன், 75, கோவில் வீதி, நல்லூர். (கைலாசபிள்ளையார் கோவிலிலிருந்து 300m தெற்கே) (6816)

### கனடாவில் கல்வி

கனடாவில் Student Visa பெறுவது தொடர்பான விபரங்களுக்கு- இல: 140, பலாலி வீதி, பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி. T.P.No:-222 2478 (6819)


## பங்குனி உத்தரத் திருவிழா

(திருநெல்வேலி)

வடமராட்சி மாமுனை ஸ்ரீ நாக தம்பிரான் ஆலய பங்குனி உத்தரத் திருவிழா எதிர்வரும் 18 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

கடந்த 5 வருடத்தின் பின் பங்குனி உத்தர உற்சவம் இம்முறை இடம்பெறவுள்ளமை குறிப்பிடத் தக்கது. (உ-43)

## சீருடைத்துணி கூப்பன்கள் விநியோகம்

(நெடுந்தீவு)

நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கான மாணவர் இலவச சீருடைத்துணிக் கூப்பன்கள் கிராம அலுவலர்கள் மூலமாக விநியோகிக்கப்பட்டு வருவதாக உதவி அரசாங்க அதிபர் எஸ். பேரானந்தம் அறிவித்துள்ளார். (உ-126)

# நிரந்தர சமாதானம் ஏற்பட அர்ப்பணிப்புடன் செயற்படுகிறேன்

## விடாருடனான சந்திப்பில் ஜனாதிபதி விளக்கம்

(கொழும்பு)




தமிழீழ விடுதலைப் புலிகள் புரிந்துணர்வு உடன்படிக்கையினை மீறிவரும் தற்போதைய நிலையிலும் நிரந்தர சமாதானம் ஏற்பட வேண்டும் என்பதற்காக நான் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றேன்.

விடுதலைப் புலிகள் தமது நிலைப்பாடு குறித்து தெளிவின்மையுடன் இருப்பதாக ஜனாதிபதி குற்றம் சாட்டியுள்ளார்.

நேற்று முன்தினம் மாலை நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கிசனை ஜனாதிபதி மாளிகையில் வைத்துச் சந்தித்த போது இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தொடர்ந்து விடாருடன் கலந்துரையாடுகையில்,

கடந்த வருடம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவினாலும் தமிழீழ விடுதலைப் புலிகளினாலும் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்த விடயங்களை விடுதலைப் புலிகள் ஒழுங்காக கடைப்பிடிக்கிறார்களா?



என்பதில் எனக்கு இப்போது சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

போர் நிறுத்த காலத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் மேற்கொண்டு வரும் ஆயுதக் கடத்தல் மற்றும் சிறுவர்களைத் தமது இயக்கத்தில் சேர்த்துக் கொள்ளல் ஆகிய விடயங்கள் குறித்தும் சமாதானப் பேச்சுவார்த்தைகளின்போது ஆராயப்படவேண்டும்.

கடற்பிரதேசத்தில் கடற்படையினர் ரோந்து நடவடிக்கைகளையும் யுத்த நிறுத்த மீறல் சம்பவங்களையும் விட புலிகளே இதில் அதிகமாக ஈடுபட்டு வருகின்றனர் என்பதனை கடற் பகுதியில் அண்மையில் இடம்பெற்ற சம்பவங்கள் எடுத்துக் காட்டுகின்றன எனவும் தெரிவித்தார்.

இச்சந்திப்பில் இலங்கைக்கான முன்னாள் நோர்வேத் தூதுவர் ஜோன் வெஸ்பேர்க், பாராளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கதிர்காமர் ஆகியோரும் கலந்து கொண்டனர். (உ-8)

# நலிவுற்ற மக்களுக்கு நல மேம்பாட்டு உதவி

(யாழ்ப்பாணம்)

கொழும்பு நகர லயன்ஸ் கழகம் மானிப்பாய் கோவில்பற்று லயன்ஸ் கழகத்துடன் இணைந்து நடத்தும் நலிவுற்ற மக்களுக்கான உதவி வழங்கும் நிகழ்வு நாளை ஞாயிற்றுக் கிழமை மானிப்பாய் மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

உடுதுணி, பாடசாலைச் சீருடைகள், பாடசாலை உபகரணங்கள், சக்கர நாற்காலிகள், ஊன்று கோல்கள், மருந்து வகைகள், பால்மா வகைகள், மூக்குக் கண்ணாடிகள், தையல் இயந்திரங்கள், சைக்கிள்கள் என்பன அன்றைய தினம் தேர்ந்தெடுக்கப்பட்ட நலிவுற்ற மக்களுக்கு வழங்கப்படவுள்ளன. (உ)

# உண்மைக்குப் புறம்பான செய்திகள் குறித்து பொ.ஐ.மு. தலைவர்கள் முறையீடு

## ஊடகத்துறை அமைச்சர் மீது ஜனாதிபதி பாய்ச்சல்

(கொழும்பு)

அரச மற்றும் தனியார் துறை ஊடகங்கள் தமது செய்திகளை திரித்து வெளியிடுவது தொடர்பாக பொதுஜன ஐக்கிய முன்னணியின் சிரேஷ்ட தலைவர்கள் ஜனாதிபதியிடம் முறைப்பாடுகள் செய்துள்ளனர்.

கடந்த 10 ஆம் திகதி கொழும்பு நகர மண்டபத்தில் நடைபெற்ற கூட்டம், ஆர்ப்பாட்ட ஊர்வலம் போன்றவை தொடர்பாக ஊடகங்கள் உண்மைச் செய்திகளை வெளியிடவில்லை என்று ஜனாதிபதியை நேரில் சந்தித்து பொ.ஐ.மு தலைவர்கள் தமது அதிருப்தியைத் தெரிவித்துள்ளனர்.

ஜனாதிபதியின் நற்பெயரை சிதைக்கும் வகையில் அமைச்சரவை உரையாடல்களை பத்திரிகைகள் திரித்து வெளியிட்டுள்ளன என்ற கருத்துப்பட ஜனாதிபதியின் ஊடகச் செயலாளர் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். அந்த அறிக்கையில்,

1988-89 காலத்தில் ஜே.வி.பியின் பயங்கரவாத நடவடிக்கைகளில் கொல்லப்பட்ட பெருந்தோட்டத்துறை ஊழியர்களுக்கு இழப்பீடு வழங்குவதற்கு ஜனாதிபதி ஆட்சேபம் தெரிவித்ததாக செய்திகள் வெளியாகியுள்ளன.

மேற்படி விடயம் அமைச்சரவையில் உரையாடப்பட்ட போது, இதற்கு முன்னய அமைச்சரவைத் தீர்மானம் ஒன்றை நினைவுபடுத்திய ஜனாதிபதி, தேர்தல் வன்முறைகளினால் பாதிக்கப்பட்ட 62 பேர்களுக்கான இழப்பீடுகள் அமைச்சரவையினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட நிலையிலும் இன்னுமேன் வழங்கப்படவில்லை என எடுத்துக் கூறினார்.

கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் 10 ஆம் திகதி அதற்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்தது. நிதிப்பற்றாக்குறை காரணமாக இது வழங்கப்படவில்லையாயின், பெருந்தோட்டத்துறை ஊழியர்களுக்கு கொடுப்பனவு செய்வதற்கு முடிவது எவ்வாறு என்றும் ஜனாதிபதி கேட்டிருந்தார்.

சகலருக்குமான இழப்பீடுகள் ஒரு தடவையில் வழங்கப்பட வேண்டும் என்றும் கூறியிருந்தார் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பொறுப்பற்ற விதத்தில் ஊடகங்கள் வெளியிடும் செய்திகளுக்கு ஊடகத்துறை அமைச்சரே பொறுப்பேற்க வேண்டுமென ஜனாதிபதி வலியுறுத்தியிருப்பதாகவும் கூறப்படுகின்றது. (உ)


## தரம் ஏழு மாணவர் கட்டுரைப் போட்டி பரிசளிப்பு

இன்று மு.ப. 10 மணிக்கு வலம்புரி கேட்போர் கூடத்தில்இடம்பெறும்

## தரம் 08 மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டி

கட்டுரையின் தலைப்பு : ''எனக்குச் சிறகு முளைத்தால்''

கட்டுரை 150 தொடக்கம் 175 சொற்களுக்குள் அமைதல் வேண்டும்.

முடிவுத் திகதி : 25.03.2003

### இணைக்கும் பத்திரம்

### கட்டுரைப் போட்டி இல-3

மாணவர் முழுப் பெயர் :------------------------------

பாடசாலை :------------------------------

கற்கும் தரம் :------------------------------

உறுதிப்படுத்துகிறேன்

------------------------------

ஆசிரியர்


### யாழ். மாநகராட்சி மன்ற

# சைவசமய விவகாரக் குழு நடத்திய சமய அறிவுப் போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ். மாவட்டப் பாடசாலை மாணவ மாணவியருக்கிடையே வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம், தீவகம் மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய வலயங்களில் 9 பரீட்சை நிலையங்களில் யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற சைவ சமய விவகாரக் குழுவினால் நடாத்தப்பட்ட சமய அறிவுப் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

### கீழ்ப்பிரிவு

*1ம் இடம்*–கு.பாலிகா-யா/கொக்குவில் இந்துக் கல்லூரி

*2ம் இடம்*-உ.தனுஜா-யா/வேம்படி மகளிர் கல்லூரி

*3ம் இடம்*-மோ.ரமணன்-யா/இந்துக்கல்லூரி

### மத்தியபிரிவு

*1ம் இடம்*–சோ.நிருஷிகா-யா/வேம்படி மகளிர் கல்லூரி

*2ம் இடம்*-ம.அபிராமி-யா/வேம்படி மகளிர் கல்லூரி

*3ம் இடம்*-உ.தர்ஷினி-யா/வேம்படி மகளிர் கல்லூரி

### மேற்பிரிவு

*1ம் இடம்*–சி.மயூரன்-யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி

*2ம் இடம்*-கி.விக்னேஸ்வரி-யா/மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை

*3ம் இடம்*-ம.திருமகள்-யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி

### அதிமேற்பிரிவு

*1ம் இடம்*–க.அம்புஜாசினி-யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி

*2ம் இடம்*-இ.ரேகா-யா/இணுவில் மத்திய கல்லூரி

*3ம் இடம்*-பா.லேணுகாராணி-யா/நயினாதீவு ம.வித்தி.

மேற்படி ஒவ்வொரு பிரிவிலும் தலா 23 பேர் தகைமை பெற்றுள்ளனர்.

இவர்களுக்கான பரிசளிப்பு வைபவம் எதிர்வரும் 22 ஆம் திகதி சனிக்கிழமை நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (உ)

## கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

மாவை. கொல்லங்கலட்டி சிதம்பரேஸ்வர சுவாமி திருக்கோயில் சுவர்ண பந்தன மகா கும்பாபிஷேகப் பெருவிழா எதிர்வரும் 19 ஆம் திகதி புதன்கிழமை நடைபெறவுள்ளது. (உ-10)

## புலிகளின்சீருடைத் துணிப் பொதி கடலில் மீட்பு!

(புதுடில்லி)

புதுக்கோட்டை மாவட்டம் கோட்டைப்பட்டினம் கடல் பகுதியில் விடுதலைப் புலிகளின் சீருடை எனக் கருதப்படும் துணிப்பொதி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கடற்றொழிலாளியான ஜோன் என்பவரின் மீன்வலையில் சிக்கிய இந்தப் பொதியை அவர் கோட்டைப் பட்டினம் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளார்.

அதனைச் சோதனையிட்ட பொலிஸார் பச்சை, மஞ்சள் நிறமுடைய 160 மீற்றர் நீளமுடைய துணி அதனுள் இருப்பதைக் கண்டறிந்துள்ளனர்.

இது விடுதலைப் புலிகளின் சீருடைத் துணியாக இருக்கலாம் என்று கருதி வழக்குத் தாக்கல் செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

விடுதலைப் புலிகளுக்கு சீருடைத் துணிகள் கொண்டு செல்லப்பட்ட போது அதில் ஒரு பொதி தவறிக் கடலில் வீழ்ந்திருக்க வாய்ப்புள்ளதாகவும் பொலிஸார் கருத்துக் கூறியுள்ளனர். (உ-2)

## மாணவர்சுகாதாரப் பரிசோதனை

(நெடுந்தீவு)

நெடுந்தீவுப் பாடசாலை மாணவர்களுக்கான பொதுச் சுகாதார பரிசோதனைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

நெடுந்தீவு மாவட்ட வைத்திய அதிகாரி திருஞானசம்பந்தமூர்த்தி மற்றும் சுகாதார தொண்டர்கள் இதற்கு அனுசரணை வழங்குகின்றனர்.

இவ்வருடத்திற்கான முதலாவது பரிசோதனை முகாம் நெடுந்தீவு மேற்கு மங்கையற்கரசி வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்றன.

தொடர்ந்து ஏனைய பாடசாலைகளிலும் இப்பரிசோதனைகள் நடத்தப்படவுள்ளன. (உ-126)

## மரவேலைப் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். பிரதேச செயலகத்தின் கீழ் இயங்கும் அரச இயந்திரசாதன மரவேலைப் பயிற்சிப் பாடசாலைக்குப் பயிற்சியாளர்களைச் சேர்ப்பதற்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

14 முதல் 30 வயதுக்கிடைப்பட்ட 8 ஆம் வகுப்பில் சித்தியடைந்த ஆண், பெண் இருபாலாரும் இந்த ஒரு வருடப் பயிற்சிக்கு விண்ணப்பிக்க முடியும்.

விருப்பமுடையவர்களை யாழ். பிரதேச செயலக முகவரிக்கு எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (உ)

## விமானக் கட்டணம் உயர்வு

(கொழும்பு)

எரிபொருட்களின் விலை உயர்வு காரணமாக அண்மையில் விமானக் கட்டணங்கள் 10 டொலர்களால் அதிகரிக்கப்பட்டுள்ளன.

இந்தியாவிற்கான விமானக் கட்டணங்கள் 5 டொலர்களாலும் ஏனைய நாடுகளிற்கான ஒரு வழிக் கட்டணங்கள் 10 டொலர்களினாலும் அதிகரித்துள்ளன.

வளைகுடாவில் போர் ஏற்படும் பட்சத்தில் இக்கட்டணம் மேலும் உயரலாம் எனவும் கூறப்படுகிறது. (உ-10)

## விசாரணைகள் பூர்த்தி

(கொழும்பு)

திட்டமிட்ட குற்றச் செயல்களை தடுப்பது சம்பந்தமான நகல் சட்டமூலத்திற்கு எதிரான நீதிமன்ற விசாரணைகள் பூர்த்தியாகியுள்ளன.

இது குறித்த முடிவு சபாநாயகரிற்கும் ஜனாதிபதிக்கும் இரகசியமான முறையில் அறிவிக்கப்படவுள்ளதாக உயர் நீதி மன்றம் தெரிவித்துள்ளது.

அரசினால் சமர்ப்பிக்கப்பட்ட நகல் சட்டமூலத்தை கலாநிதி சிராணி பண்டாரநாயக்கா தலைமையிலான 3 நீதிபதிகள் கொண்ட குழு விசாரித்துள்ளது. (உ-10)

## இன்று ஒரு தகவல்

### அன்பின் வலிமை அறிவீர்

ஒரு இராஜா இருந்தார். அவருக்கு என்ன பொழுது போக்குத் தெரியுமா? தன்னைச் சுற்றியிருக்கிறவர்களிடம் ஏடாகூடமாக ஏதாவது கேள்வி கேட்கவேண்டியது! அவர்கள் பதில் சொல்லத் தெரியாமல் விழிக்கிற பொழுது அதைப்பார்த்து இரசிக்க வேண்டியது! இப்படி ஒரு சுபாவம் அவருக்கு! ஒரு நாள் அவருடைய மந்திரி ஒருவர் அவரிடம் மாட்டினார். அவரை அருகில் அழைத்து, அமைச்சரே! எனக்கு ஒரு சந்தேகம் என்றார். என்ன ? என்றார் அமைச்சர். கடவுள் இருக்கிறாரா? என்று ஒரு கேள்வி கேட்டார். ஆமாம் இருக்கிறார்! என்றார் அவர். அவர் என்ன சர்வ வல்லமை படைத்தவரா? என்றார். ஆமாம் அரசே அவனன்றி ஓர் அணுவும் அசையாது! இருந்த இடத்திலிருந்து கண் சிமிட்டும் நேரத்தில் ஏராளமான அற்புதங்களை நிகழ்த்த அவனன்றி யாரால் முடியும்? என்றார் அமைச்சர்.

இந்த இடத்திலேதான் எனக்கு இன்னொரு சந்தேகம் என்றார் இராஜா. என்ன சொல்லுங்கள் என்றார் அமைச்சர். நீங்கள் சொல்கிறீர்கள் அவர் சர்வவல்லமை படைத்தவர், இருந்த இடத்தில் இருந்தே ஏராளமான அற்புதங்களைச் செய்யக் கூடியவர் என்று. அப்படி இக்கும் பொழுது, அவர் இருந்த இடத்திலேயிருந்தே ஒருவருடைய கஷ்டத்தை தீர்த்துவைத்துவிடலாமே. மாயாஜாலம் பண்ணுகிறமாதிரி! அதைவிட்டுவிட்டு, பக்தன் கூப்பிட்டால் உடனே ஒரு வாகனத்தில் ஏறி ஏன் இங்கு ஓடி வர வேண்டும்? அப்படி வருவதாகப் புராணங்கள் சொல்கின்றனவே. அவருக்கு இருக்கிற சக்திக்கு - அவர் உட்கார்ந்த இடத்தில் இருந்தே ஒரு விரலை அசைத்தால்... இங்கே பக்தனுக்குக் கிடைக்க வேண்டியது கிடைத்து விடாதா? என்றார்.

அமைச்சர் யோசித்தார். அரசே! இந்தக் கேள்விக்கான பதிலைச் சமயம் வருகிறபொழுது சொல்கிறேன் என்று சொல்லி அப்போது அவரிடமிருந்து தப்பித்துக் கொண்டார். கொஞ்ச நாட்கள் கழித்து ஒருநாள் இராஜா உல்லாசப் பயணம் புறப்பட்டார். அவருடைய குடும்பம், உறவினர்கள் இன்னும் பலர் சேர்ந்து போனார்கள். ஒரு பெரிய படகில் ஏறி ஒரு நதியைக் கடந்து போய்க் கொண்டிருக்கிறார்கள். அந்தப் படகின் முனையிலே இராஜா உட்கார்ந்து நதியின் அழகை இரசித்துக் கொண்டிருந்தார். மறுமுனையில் அமைச்சர் இளவரசனுக்கு ஏதோ வேடிக்கை விளையாட்டுக் காட்டிக் கொண்டிருந்தார். படகு நடு ஆற்றில் போய்க்கொண்டிருக்கிறது. அப்பொழுது தொப் பென்று ஒருபெரிய சத்தம்! அரசே! நமது இளவரசர் ஆற்றில் விழுந்து விட்டார் என்று அலறினார் அமைச்சர்.

அவ்வளவு தான். உடனே இராஜா குபீர் என்று ஆற்றில் பாய்ந்தார். மகனைத் தேட ஆரம்பித்து விட்டார். அங்கும், இங்கும் கொஞ்சநேரம் அல்லாடினார். மகனைக் காணவில்லை. அதன் பின் மந்திரியும் ஆற்றில் குதித்து இராஜாவிடம் வந்தார். அரசே! இளவரசர் படகிலேயே பத்திரமாக இருக்கிறார். தண்ணீரில் விழுந்தது வெறும் கல்தான் என்றார். இருவரும் ஈர உடையுடன் படகுக்கு வந்து சேர்ந்தார்கள். இராஜா மந்திரியைக் கோபமாகப் பார்த்தார். இது என்ன விளையாட்டு? என்றார்.

அரசே கொஞ்ச நாட்களுக்கு முன் நீங்கள் கேட்ட கேள்விக்குப் பதிலை நீங்கள்அனுபவ ரீதியாக உணரவேண்டும் என்று ஆசைப்பட்டேன். அதனாலேதான் இப்படி! என்றார் அமைச்சர். அதன் பின் விளக்கம் கொடுத்தார். அரசே! ஒரு பக்தனுக்குக் கஷ்டம் என்றால் இருந்த இடத்திலிருந்தே அதைத் தீர்த்து வைக்காமல் கடவுள் ஏன் நேரில் ஓடிவரவேண்டும்? என்று கேட்டீர்கள். இப்பொழுது நடந்தது என்ன? இளவரசர் தண்ணீரில் விழுந்து விட்டார் என்றதும் நீங்கள்... ம்... என்று சொல்லி ஒரு விரலைக் காட்டினால் போதும் உடனே தண்ணீரில் குதிக்க ஏராளமான காவலர்கள் இங்கேயிருக்கிறார்கள். ஆனால் நீங்கள் என்ன செய்தீர்கள்? இளவரசர் விழுந்து விட்டார் என்றதுமே அவர் எந்தப்பக்கம், எந்தத்திசையில் விழுந்தார் என்று கூடக் கேட்காமல் உடனே தண்ணீரில் குதித்தீர்கள். அப்படி உங்களைக் குதிக்க வைத்தது எது? மகன் மேல் உள்ள பாசம்! அன்பு! அது மாதிரித் தான் கடவுளும் ஓடிவருகிறார் என்றார். அதன் பின்னர் அந்த இராஜா ஏடகூடமாகக் கேள்வி கேட்பதை விட்டுவிட்டார்.

இந்தத் தகவலைக்கேட்டு விட்டு உடனே நீங்களும், கடவுளே! கொஞ்சம் இப்படி வந்து விட்டுப் போ! என்று கூப்பிட்டு, அவர் வருகிறாரா என்று ஆகாயத்தைப் பார்த்துக் கொண்டு நிற்காதீர்கள். இந்தக் கதையின் கருத்து என்னவென்றால், அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ் என்பதுதான். அன்பு வலிமையானது என்பதைப் புரிந்து கொண்டால் போதும். உங்களுக்கு ஒருகல்யாணப் பத்திரிகை வருகிறது. அதற்கு நீங்கள் வாழ்த்துச்செய்தி அனுப்புவதற்கும், நேரில் போவதற்கும் வித்தியாசம் இருக்கிறதல்லவா?

அன்று ஒருவன் அப்படித்தான் வந்தான். கையில்ஒரு கல்யாணப் பத்திரிகை வைத்திருந்தான். சார்... இந்தக் கல்யாணம கல்கத்தாவில் நடக்கிறது. வெகு தூரம்தான் . இருந்தாலும் நான் நேரில் போய்க் கலந்துகொள்ளப் போகிறேன் என்றான். மாப்பிள்ளை அவ்வளவு நெருக்கமானவரா? என்றேன். இல்லைசார்! மாப்பிள்ளையே நான்தான்! என்கிறான்.

*தென்கச்சி கோ. சுவாமிநாதன்*

# வட-கிழக்கு மாகாணசபை நிர்வாகத்தில் முஸ்லிம்களுக்கு உரிய இடமளிக்கப்படும்

## பிரதமரின் செயலர் உறுதிமொழி

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாண சபை நிர்வாகத்தில் முஸ்லிம்களுக்கும் உரிய இடமளிக்கப்படும்.

மாகாண ஆளுநர் அசோகவர்த்தன, பிரதமரின் செயலாளர் பிரட்மன் வீரக்கோன் ஆகியோர், அமைச்சரும ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவருமான ரவூப் ஹக்கீமிடம் இவ்வாறு உறு தியளித்துள்ளனர்.

அமைச்சர் ரவூப் ஹக்கீமின் வேண்டுகோளுக்கு இணங்க பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஏற்பாடு செய்திருந்த உயர் மட்டக் கலந்துரையாடல் நேற்று முன்தினம் பிரதமரின் அலுவலகத்தில் நடைபெற்ற போது இவ் உறுதி மொழி வழங்கப்பட்டது.

கலந்துரையாடலில் வடக்கு-கிழக்கு மாகாண சபை நிர்வாகத்தில் பல்வேறு தரங்களிலும் முஸ்லிம் மக்களின் விகிதாசாரத்திற்கு ஏற்ப உரிய இடம் வழங்கப்பட வேண்டியதன் அவசியம் பற்றி ஆராயப்பட்டு இணக்கங்களும் காணப்பட்டன.

இதற்கமைய வடக்கு-கிழக்கிலுள்ள 5மாகாண சபைகளின் கீழுள்ள பிரதிச் செயலாளர், ஆலோசகர், மாகாணப் பணிப்பாளர் ஆகிய பதவிகளில் ஏதாவது ஒரு பதவி முஸ்லிம்களுக்கு வழங்கப்படவேண்டும் என அங்கு சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இக்கோரிக்கையை விரைவில் தீர்ப்பதெனவும் அதற்கான திறைசேரி அனுமதியினை வழங்கும்படி அறிவுறுத்தவிருப்பதாகவும் பிரதமரின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் உயர் பதவி வகிக்கும் 12 பேரில் ஒருவர் கூட முஸ்லிம் இல்லையென்பது இச் சந்தர்ப்பத்தில் சுட்டிக் காட்டப்பட்டதுடன், அவ்வாறான பதவிகளுக்கு அரசாங்க நிர்வாக சேவையிலுள்ள பொருத்தமான முஸ்லிம்கள் சிலரை சிபார்சு செய்யுமாறு கேட்கப்பட்டது.

மாகாணக் கல்வியமைச்சின் கலாசாரப் பணிப்பாளராக ஒரு தமிழர் மாத்திரமே கடமையாற்றுகிறார் ஏனைய சமயக் கலாசாரங்களை பிரதிபலிக்கும் ஏனைய சமூகத்தைச் சேர்ந்த வர்களும கலாசாரப்பணிப்பாளர்களாக நியமிக்கப்பட வேண்டும். இதற்கு விரைவில் அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட வேண்டும் எனவும் மேலும் கோரப்பட்டது.

இக்கலந்துரையாடலில் பிரதியமைச்சர் பசீர்ஹேகுதாவு, பாராளுமன்ற உறுப்பினர்களான அஸ்வர் இஸ்மாயில்,எச்.எம். எம்.ஹரீஸ், எம்.எஸ். தௌபீக் ஆகியோரும் கட்சியின் செயலாளர் நாயகம் என்.ரி. ஹசன் அலியும்கலந்து கொண்டனர் (உ-8)

# அமெரிக்கா வழங்கும் கப்பல் நவீன மயப்படுத்தப்படாதது

(கொழும்பு)

அமெரிக்க அரசாங்கம் இலங்கைக் கடற்படைக்கு வழங்கவுள்ள கப்பலை நவீன மயப்படுத்துவதற்கான செலவை இலங்கை அரசாங்கமே ஏற்றுக்கொள்ளவிருப்பதாகக் கூறப்படுகிறது.

150மில்லியன் டொலர் பெறுமதியுடையதும் 210அடி நீளமானதுமான இந்த நடுத்தர அளவுக் கப்பல் நன்கொடையாகவே இலங்கைக்கு வழங்கப்படுகிறது.

'த கரேஜஸ்' எனப்படும் இக்கப்பல் 1968ஆம் ஆண்டு ஏப்ரல் 19ஆம் திகதி வெள்ளோட்டம் விடப்பட்டு பின் அமெரிக்க கரையோரக் காவல் பிரிவில் சேவையாற்றி வந்துள்ளது.

ரோந்துப்பணிகளுக்கேற்றதான இதில் எம்.கே.22.3அங்குலம் 50பீரங்கி ஒன்றும், 81மி.மீ மோட்டார்கள் இரண்டும், எம் 2 சற்பி - 50கலிபர் பிறவுணிங் இயந்திரத்துப்பாக்கிகள் இரண்டும், எம்.கே - 38.25மி.மீ இயந்திரத்துப்பாக்கி ஒன்றும், எம் 2. எச் பி - 50 கலிபர் இயந்திரத்துப்பாக்கிகள் இரண்டும் பொருத்தப்பட்டுள்ளன.

இவற்றுடன், தேவைப்படுமிடத்து நீர்மூழ்கி எதிர்ப்புக் கருவிகள், இரு கடற்பீரங்கிகள், மற்றும் பல மேலதிக பீரங்கிகளை அவசரகாலத் தேவைகளுக்கு பொருத்திப் பயன்படுத்தக் கூடியது. (உ)

## இராசி பலன்

**15.03.2003**

(பங்குனி 01 சனி)

| | |
|---|---|
| துவாதசி | மு.இ 9.51 வரை |
| பூசம் | காலை7.20 வரை |
| இராகுகாலம் | 9.21 - 10.51 |
| சுபநேரம் | 3.21 - 4.51 |

**மேடம்**
தன்னம்பிக்கைக் குறைவு, அற்பர் நேசம், மாதாசுகம், காரிய சுபாதம்.

**இடபம்**
இனிய அனுபவம், வாக்கு மேன்மை, பொருள் சேர்க்கை, அன்னியர் சந்திப்பு.

**மிதுனம்**
கௌரவக்குறைவு, தர்மம், குடும்ப சுகம், முயற்சி தாமதம்.

**கடகம்**
நல்ல முயற்சி, ஜனவசியம், போசன சுகம், மனமகிழ்ச்சி.

**சிங்கம்**
உணர்ச்சிவசப்படல், பிதாசிந்தை, காரிய அலைச்சல், உறவினர் மனஸ்தாபம்.

**கன்னி**
தொழில் சிந்தை, மனமகிழ்ச்சி, உறவினர் வருகை, கீர்த்தி.

**துலாம்**
கடின உழைப்பு, சுபநிகழ்வு, முயற்சி பலிதம், சகோதரர் உதவி.

**விருச்சிகம்**
புதிய திட்டமிடல், ஆன்றோர் மதிப்பு, வீண்பயம், பிரயாணம்.

**தனுசு**
மனக்கிலேசம், எடுத்த காரியம் தடங்கல், உடல்வியாதி, பொருள் நாசம்.

**மகரம்**
நினைத்தகாரியம் கைகூடும், சௌபாக்கியம், பொருள் சேர்தல், பயணம்.

**கும்பம்**
விரும்பிய பொருள்சேர்தல், தேகநலம், பகைவர் நேசம், முயற்சி பலிதம்.

**மீனம்**
காரிய இடையூறு, பொருட்களால் கவலை, மனக்குறைவு, வியாதி.

(பழையபடி கணிப்பிடப்பட்டது)

- வளவன்.

# ஒளி நாடாவைச் சான்றுப் பொருளாக ஏற்க மறுப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தற்கொலைக் குண்டுதாரிகள் அணியும் அங்கிகளை தனது வர்த்தக நிறுவனத்தில் வைத்திருந்ததாக குற்றஞ்சாட்டப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருக்கும் கணபதி தணிகாசலம் என்பவருக்கெதிரான வழக்கு விசாரணை நேற்று முன்தினம் வெலிக்கடைச் சிறைச்சாலையிலுள்ள நீதிமன்றத்தில் நடைபெற்றது.

இந்த அங்கிகள் கைப்பற்றப்பட்ட போது பொலிஸாரால் எடுக்கப்பட்ட ஒளிப்பதிவுநாடாவை சான்றுப் பொருளாக அனுமதிக்கவேண்டுமென்று அரசுதரப்புச் சட்டத்தரணி எம். நவாவி கேட்டுக்கொண்டார். ஆனால் எதிர்தரப்பு சட்டத்தரணி கே. வி. தவராசா அதற்கு ஆட்சேபனை தெரிவித்தார்.

விசாரணைக்கு 45 நாட்களுக்கு முன் அதுபற்றி எதிரிதரப்புக்கு அறிவிக்க வேண்டுமெனவும், விசாரணை நடைபெற்று வரும் இன்றைய நாள் வரை அவ்வாறாக எதிர்த்தரப்புக்கு அறிவிக்கப்பட்டிருக்கவில்லை என்றும் எதிர்த்தரப்புச் சட்டத்தரணி மேலும் தெரிவித்தார்.

எதிர்த்தரப்பு சட்டத்தரணியின் வாதத்தை ஏற்றுக் கொண்ட நீதிபதி ஒளி நாடாவை சான்றுப் பொருளாக ஏற்றுக் கொள்ள முடியாதென உத்தரவிட்டார். (த)

## கலட்டிப்பகுதியில்

# ஹெலோட்றெஸ்ற் நிறுவனம் கண்ணிவெடிகளை அகற்றுகிறது

(யாழ்ப்பாணம்)

மனிதாபிமான கண்ணிவெடி அகற்றும் நிறுவனத்தின் ஹெலோட்றெஸ்ற் இயந்திரவியல் வெடிபொருள் அகற்றும் பிரிவின் நான்காம் கட்டப் பணிகள் நேற்று முன்தினம் யாழ். கலட்டிப் பகுதியில் ஆரம்பமாயின.

மனித நடமாட்டம் அதிகம் காணப்படும் இடங்களுக்கு முன்னுரிமையளித்து செயற்பட்டு வரும் மனிதாபிமான கண்ணிவெடி அகற்றும் நிறுவனத்தின் இயந்திரப், பொறிமுறைமூலம் வெடிப்பொருட்களை அகழ்ந்து அவற்றைப் பாதுகாப்பாக வெடிக்க வைக்கும் இந் நடவடிக்கை ஓரிரு வாரங்கள் கலட்டிப் பகுதியில் தொடர்ந்தும் இடம்பெறவுள்ளது.

நாவற்குழி, அரியாலை, சுண்டுகுளிப் பகுதிகளில் இதுவரை இந் நிறுவனம் திருப்திகரமான பணிகளை மேற்கொண்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது. (உ-4)

# தரம் - 5 புதிய வேலைத்திட்டம் தேசிய மட்டத்தில் அமுல்

(கொழும்பு)

அரசினால் மேற்கொள்ளப்பட்டு வரும் புதிய கல்விச் சீர்திருத்த கொள்கைத் திட்டத்தின் கீழ் தரம்- 5 இல் ஆரம்பிக்கப்பட்டுள்ள புதிய வேலைத் திட்டத்தை தேசிய மட்டத்தில் நடைமுறைப்படுத்துவதற்கென நடவடிக்கை எடுத்துள்ளதாக கல்விப பண்பாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் கே. நாணயக்கார தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

புதிய கல்வி சீர்திருத்தத்தின் கீழ் 5ஆம் தரத்திற்கான புதிய பாடத்திட்டத்திற்கு தேசிய கல்வி நிறுவகத்தின் கற்கைச் சபைகள், நூற்கல்வி அலுவல்கள் சபை, நிறுவகக் கவுன்சில என்பன அங்கீகாரம் வழங்கியுள்ளன.

இப் புதிய பாடத்திட்டம் இவ்வாண்டு முதல் சகல பாடசாலைகளிலும் நடைமுறைப்படுத்தப்படும் போது ஆரம்பக்கல்வி நிலையில் குறிக்கப்படும் 3வது முதன்மை நிலைக்குரிய சகல பாடங்களும் நிகழ்ச்சித் திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்படும்.

அத்துடன் ஆசிரியர்கள் கைந்நூல உரிய பாடத்திட்டம் என்பவற்றை ஜனவரி மாதத்தில் இருந்தே பயன்படுத்த வேண்டும்.

இதேவேளை, செயற்பாட்டு ரீதியில் அமைந்த வாய்மொழி ஆங்கிலம், தொடர்பாடல் ஆங்கில நிகழ்ச்சித் திட்டம், விருப்பத்திற்குரிய பாடம், இணைக் கல்வித்திட்டச் செயற்பாடுகள், உடல் ஆரோக்கியச் செயற்பாடுகள், மாணவர் செயலாற்று அறிக்கை, அத்தியாவசிய கற்றல் தேர்ச்சி நிகழ்ச்சித் திட்டம் போன்றவை இவ்வாண்டு முதல் அமுல்படுத்தப்படும் எனவும்அமைச்சின் செயலாளர் நாணயக்கார மேலும் தெரிவித்தார். (உ-10)

வன்கண் குடிகாத்தல் கற்றறிதல்
-ஆள்வினையோடு
ஐந்துடன் மாண்டது அமைச்சு
-குறள்-

வலம்புரி

## பீரிஸின் அதிரடி

விடுதலைப் புலிகளின் கப்பலை சர்வதேசக் கடற்பரப்பில் வைத்து தாக்கிய சம்பவம் யுத்த நிறுத்த மீறல் அல்ல. கடற்படை தனது கடமையைச் செய்துள்ளது என மொட்டையாகக் கருத்துக் கூறி சமாதானத்தின் பால் ஐயுறவை ஏற்படுத்தி உள்ளார் அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ.

விடுதலைப் புலிகளின் வ்தத கக் கப்பல் சர்வதேசக் கடற்பரப்பில் வைத்து இலங்கைக் கடற்படையினரால் தாக்கப்பட்டதும், அதனால் விடுதலைப் புலிகளின் 11 போராளிகள் கொல்லப்பட்டதும் சமாதான முயற்சிக்குப் பெருங் குந்தகமாக அமைந்துள்ள போது, அமைச்சர் பீரிஸ் மேற்கண்டவாறு கருத்துத் தெரிவித்திருப்பது வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போல அமைந்துள்ளது. பொறுப்பான பதவியை வகிக்கும் அமைச்சர் பீரிஸ் மீது தமிழ் மக்கள் நம்பிக்கை வைத்துள்ளனர். இனப்பிரச்சினைத் தீர்வில் அவர் நிதானமாக நடந்து கொள்பவர் என்ற கருத்துக் கூட தமிழ் மக்களிடம் உண்டு. நிலைமை அப்படியாக இருக்கும் போது, கப்பல் தாக்கப்பட்ட சம்பவத்திற்கு எதிர்மாறாகக் கருத்துத் தெரிவித்து அமைச்சர் பீரிஸ் தமிழ் மக்களிடமுள்ள தனது செல்வாக்கைச் சரித்துக் கொண்டார்.

அமைச்சர் பீரிஸ் கூறிய கருத்தை ஐக்கிய தேசிய முன்னணியின் எந்தவொரு அமைச்சர் கூறியிருந்தாலும் அதுபற்றி தமிழ் மக்கள் அதிகம் அலட்டிக்கொள்ள மாட்டார்கள்.

ஆனால், சமாதானப் பேச்சுக்களில் அரசதரப்பிற்குத் தலைமை தாங்கும் அமைச்சர் பீரிஸ் சர்வதேசக் கடற்பரப்பில்


# எழுத்து — எழுத்தாளர் — நூல்கள்

## அன்றும்-இன்றும்

எழுத்தாளர்கள், கவிஞர்கள் மற்றும் எழுத்துத்துறையில் ஈடுபட்டுள்ள எவரும் தமது எழுத்துக்கள் நூல் உருவில் வெளிவரவேண்டும் என்று விரும்புவதும் அதற்கான முயற்சிகளில் ஈடுபடுவதும் இயற்கை.

ஆனால் நூல் உருவில் வெளிவரும் எல்லாமே விற்பனையாகி விடுகின்றனவாவென்றால் சந்தேகம் தான். எழுத்துக்காக நூல்கள் விற்பனையாவது ஒருபுறமிருக்க எழுத்தாளருக்காகவும் நூல்கள் விற்பனையாவதுண்டு.

மேல் நாடுகளில் பிரபலமான எழுத்தாளர்களின் படைப்புக்களை வெளியீட்டாளர்கள் தாமே கேட்டு வாங்கி பிரசுரித்து அதற்கான பணத்தையும் வழங்கிவிடும் பழக்கம் இருக்கின்றது. எழுத்தாளர்கள் எழுதும் நூல்களை சரிபார்த்து உதவவும், அவைகளை எந்த நிறுவனத்திடம் கொடுத்தால் பிரசுரிப்பார்கள் என்பது குறித்தும் ஆலோசனை கூறவும் கூட நிறுவனங்கள் உண்டு.



கே.ஆர்.நாராயணன்

நூல்களை எழுதுவதற்கென்று நீண்டதூரப் பிரயாணம் செய்து தரவுகளையும் கருத்துக்களையும் சேகரித்துக் கொண்டு மீண்டும் தம் நாடு திரும்பி நூல்களை தொகுதி தொகுதியாக எழுதித் தள்ளி பணம் சம்பாதிப்பவர்களும் உண்டு.

பொதுவில் எழுத்துத் திறமையுள்ள அனைவருமே அங்கே எழுதுகிறார்கள். எங்காவது அவை ஏற்றுக் கொள்ளப்பட்டு நூல் உருவாகின்றது. காரணம் நூல்களை அங்கு வாசிக்கிறார்கள். அங்கு மட்டுமல்ல ஆங்கிலத்தில் உருவாகும் நூல்கள் உலகம் முழுவதும் சந்தை வாய்ப்பைப் பெறுகின்றன. தமிழ் நாட்டில் ஆர்.கே.நாராயணன் என்ற எழுத்தாளரின் நாவல்கள் இங்கிலாந்திலேயே பிரசுரிக்கப்பட்டு அங்கு மட்டுமன்றி பல நாடுகளில் பெருவாரியாக விற்பனையாகின. தமிழ் நாட்டுக்

கின்றேன்'' என்றாராம் நாராயணன்.

இந்தியாவின் பிரபலமான ஒரு ஆங்கில கதாசிரியர் புதுடில்லிக்கு அப்போது தான் வந்திருக்கிறார் என்பதை அறிந்து ஆச்சரியப்பட்டாராம் நேரு.

''நகரங்களைப் போய்ப் பார்க்க எனக்கு நேரமில்லை. கிராமங்களில் தானே இந்தியாவின் மூச்சே இருக்கிறது'' என்று நாராயணன் ஒரு பேட்டியில் கூறியிருந்தார். பிற்காலத்தில் அமெரிக்கா உட்பட பல்வேறு நாடுகளுக்கும் திரு நாராயணன் விரிவான சுற்றுலாக்களை மேற்கொண்டார் என்பது வேறு கதை.

கிராமங்களை மேம்படுத்துவதும் கிராமங்களை இலக்கியப் பாத்திரங்களாகப் படைப்பதும் ஒரு சிறந்த தலைமையாகும்.

புத்தகம் போடுவது பற்றி எழுதப் போய் எங்கோ போய்விட்டேன் அல்லவா?

இப்பொழுதெல்லாம் வெளிநாட்டுப் பணத்தில் இங்கே என்னென்னவோ நடக்கிறது. கல்யாண வீடென்றாலென்ன, சாமர்த்திய வீடென்றாலென்ன பிறந்தநாளென்றாலென்ன வீடியோ எடுப்பது மட்டுமல்ல வீடியோ எடுப்பதற்காகவே கேக் வெட்டுவதும் கூட ஒரு பஷனாகி விட்டது.

### வெளிநாட்டு அன்பர்கள்

அது போகட்டும் வெளிநாட்டிலுள்ள நம் மக்களில் பரோபகார சிந்தை உள்ளவர்களும் ஏராளமாக இருக்கிறார்கள். கோயில்கள், அனாதை இல்லங்கள், சிறுவர் நிலையங்களுக்கெல்லாம் தாராளமாக பணம் அனுப்புகிறவர்கள் இருக்கிறார்கள். அதன் மூலம் இங்கே நல்ல காரியங்கள் பலவும் நடைபெறுகின்றன. அப்படியானவர்களை எவ்வளவும் பாராட்டலாம்.

மீண்டும் புத்தகம் போடுவதற்கு வருவோம்- அந்தக் காலத்தில் எழுத்தாளர்- அதாவது உண்மையான எழுத்தாளர்கள் அதாவது எழுத்தை நேசித்து- அந்த எழுத்தின் மூலம் சமூகத்திற்கு பணியாற்றும் எண்ணம் கொண்டிருந்தவர்கள், தாம் எழுதியவற்றை நூலுருவில் காண்பதற்கு எவ்வளவு தவித்திருக்கிறார்கள் என்பதை அவர்களிடம் தான் கேட்டறிய வேண்டும்.

ஏதோ அதை இதை செய்து சில சமயம் மனைவியின் நகைகளை விற்று புத்தகம் போட்டவர்கள் உண்டு.

கின்றன. நூல்கள் எங்கே கிடைக்கும் என்பது தெரியவில்லை.

⌖ ⌖ ⌖ ⌖

அன்று கட்டுமரம் பற்றி எழுதியிருந்தேன் அல்லவா? கட்டுமரத்தை ஆங்கிலத்தில் **Catamaran** என்று தான் அழைக்கிறார்கள். **Catumaram** என்று இருந்தது தவறு.

⌖ ⌖ ⌖ ⌖

உலக மகாகவி வில்லியம் ஷேக்ஸ்பியரின் 1623 ஆம் ஆண்டு அச்சிடப்பட்ட நூல் ஒன்று அண்மையில் 3.5 மில்லியன் பவுணுக்கு விற்கப்பட்டுள்ளது. இந்த நூலை இரு நூற்றாண்டுகளாகப் பாதுகாத்து வந்துள்ள ஒக்ஸ்போட் பல்கலைக் கழகத்தின் ஓரியல் கல்லூரி புத்தகங்கள் வாங்கவும் திருத்த வேலைகளுக்காகவும் இந்நூலை விற்பனை செய்துள்ளது.

⌖ ⌖ ⌖ ⌖

அமெரிக்காவிற்கு திரு ஆர்.கே.நாராயணன் சுற்றுப் பயணம் மேற்கொண்ட போது ஒரு சம்பவம் பற்றி பின்வருமாறு எழுதியுள்ளார்.

பல்கலைக்கழகத்தில் ஓர் இரவு காதரின் ஆன்போர்ட்ர் என்ற எழுத்தாளர் தாம் எழுதிய சிறுகதைகளை படித்துக் காட்டப் போவதாக அறிவித்திருந்தார்கள். அதற்கு நானும் நண்பர்களும் போயிருந்தோம். ஆனால் அந்நிகழ்ச்சி மிக மிகச் சாதாரணமாக இருந்தது.

அவருடைய ''சர்க்கஸில்'' என்ற மிகச் சிறந்த கதையை அவர் படைத்த போது அலுப்புத்தட்டியது. இதனால் ஓர் உண்மை எனக்கு விளங்கிற்று.

ஓர் எழுத்தாளர் தாம் எழுதிய கதைகளை உரக்கப்படித்துக் காட்டக் கூடாது. அதைப் பற்றிய விளக்கங்களும் கொடுக்க கூடாது. அப்படிச் செய்வது கதையைப் பற்றிய நல்ல அபிப்பிராயத்தையே கெடுத்து விடுகிறது.

அந்தக் கூட்டம் பற்றி அவர் மேலும் தெரிவிக்கையில்; அன்று மண்டபம் நிறைய கூட்டம் இருந்தது. இந்நிகழ்ச்சிக்கு மக்கள் ரிக்கற் வாங்கிக் கொண்டு வந்திருந்தார்கள். விசித்திரமான வழக்கம் தான். நம் நாட்டில் பிரசங்கம் கேட்க ரிக்கற் வைத்தால் மண்டபம் காலியாகத் தான் இருக்கும். பிரசங்கம் கேட்பவர்களை விட பிரசங்கம் செய்பவர்களுக்கு தான் உற்சாகம். ஆகவே ஏதாவது வெகுமதி கொடுத்துத் தான் கூட்டத்தைச் சேர்கக வேண்டும் என்று எழுதியுள்ளார்.

⌖ ⌖ ⌖ ⌖


### ஷாவின் தாடி

தாடிக்காரர்கள் பற்றி அன்று

முள்ளவர்களாகவே இருந்துள்ளார்கள்.

ஆங்கில நாடகத்தின் நவீன ஜாம்பவனாகத் திகழ்ந்தவர் ஜோர்ஜ் பேர்னாட்ஷா ஆவார். இவர் தாடி வைத்துக் கொள்ளத் தீர்மானித்தது ருசிகரமான சம்பவம்.

பேர்னாட்ஷா நாடக எழுத்தாளர்,



ஜோர்ஜ் பேர்னாட்ஷா

பத்திரிகையாளர், மேடைப் பேச்சாளர்- அவர் காலத்தில் பிரபல்யமாக இருந்த பொது அமைப்புக்களைத் தமது குத்தலான பேச்சாலும் எழுத்தாலும் சாடினார். இவ்வளவிற்கும் அவர் ஒரு பெரிய மனிதநேய மிக்க மனிதராகவே இருந்தார்.

ஷா சிறு வயதிலேயே வேலை செய்யவேண்டிய கட்டாயத்திற்குள்ளானார். 15 வயதாயிருந்த போது ஓரளவு கல்வி கற்ற நிலையில் ஒரு காணி விற்பனையாளரிடம் எழுதுநராக சேர்ந்தார். பின்னர் அங்கேயே காசாளரானார். ஓய்வு நேரங்களில் டப்ளின் தேசியக் கலையரங்கிலும் வேறு கலை நிகழ்ச்சிகளிலும் அல்லது பொது நூலகங்களிலும் செலவழித்தார்.

மைக்கல் அஞ்சலோ போன்று ஒரு ஓவியராகத் திகழவேண்டும் என்பதே அவரது இளமைக்கால ஆசையாக இருந்துள்ளது. இவ்வாறு ஐந்து ஆண்டுகள் காலத்தை ஓட்டியதன் பன்னர் வேலையில் வெறுப்பு ஏற்பட்டது. ஏழைகளை நேசித்த அவரால் ஏழைகளை சுரண்டி வாழும் தொழிலில் நிற்கவும் விருப்பமில்லாமல் போய் விட்டது. ஆதனால் வேலையை விட்டு விட்டு லண்டனுக்குப் புறப்பட்டார். அங்கே ஏற்கனவே கலை உலகில் பிரகாசித்துக் கொண்டிருந்த தனது தாயாருடன் சேர்ந்து கொண்டார். தாயாரிடமிருந்தே கலைகளில் ஆர்வத்தையும் அறிவாற்றலையும் பெற்றுக் கொண்டதாக அவரே கூறியுள்ளார்.

இருபது வயதில் லண்டன் போய்ச் சேர்ந்த பேர்னாட்ஷா முகச்சவரம் செய்யாமலே இருந்தார். பிறகு இனி சவரம் செய்வதே இல்லை என்றும் தீர்மானித்துக் கொண்டாராம்.

பீரிஸ் தமிழ் மக்களிடமுள்ள தனது செல்வாக்கைச் சரித்துக் கொண்டார்.

அமைச்சர் பீரிஸ் கூறிய கருத்தை ஐக்கிய தேசிய முன்னணியின் எந்தவொரு அமைச்சர் கூறியிருந்தாலும் அதுபற்றி தமிழ் மக்கள் அதிகம் அலட்டிக்கொள்ள மாட்டார்கள்.

ஆனால், சமாதானப் பேச்சுக் களில் அரசதரப்பிற்குத் தலைமை தாங்கும் அமைச்சர் பீரிஸ் சர்வதேசக் கடற்பரப்பில் விடுதலைப் புலிகளின் கப்பல் தாக்கப்பட்ட சம்பவம் யுத்த நிறுத்த மீறல் அல்ல. என அவசரப் பட்டுக் கூறியிருப்பது, சமாதான முயற்சிகளுக்குப் பாதிப்பை ஏற்படுத்தக் கூடியதோடு, ஒரு பொறுப்பான அமைச்சர் அவசரப்பட்டு பொறுப்பற்ற முறையில் நடந்துள்ளமையையும் இது தெளிவுபடுத்தி உள்ளது. விடுதலைப் புலிகளின் கப்பல் தாக்கப்பட்டது சரி,பிழை என்ற வாதம் இப்போது தேவையற்றது. சமாதான முயற்சிகள் நடைபெறும் போது சர்வதேசக் கடற் பரப்பில் வைத்து புலிகளின் கப்பல் தாக்கப்பட்டமை,அதனால் பதினொரு போராளிகள் உயிரிழந்தமை, இதுபற்றியே பொறுப்புள்ள ஒரு அரசாங்கம் அறிய வேண்டும். பதினொரு மனித உயிர்கள் - இந்த நாட்டின் பிரஜைகள் அழிக்கப் பட்டுள்ளார்கள். ''சமாதான காலம்'' என்ற நம்பிக்கையோடு கப்பலில் பயணித்தவர்களை நோக்கி கடற்படை தாக்குதல் நடத் திய கொடூரமான செயல் எப்படி நடந்தது. அதன் விளைவு அருமையான சமாதான முயற்சியைப் பாதிக்கும் அல்லவா? எதிர் காலத்தில் இது போன்ற சம்பவங்கள் நடைபெறாமல் இருக்க எடுக்க வேண்டிய ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் என்ன? இவை குறித்து ஆராயாமல் கடற் படைக்குச் சார்பாகப் பேசுவது யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர ஒரு போதும் உதவாது.

பொதுவில் எழுத்துத் திறமையுள்ள அனைவருமே அங்கே எழுதுகிறார்கள். எங்காவது அவை ஏற்றுக் கொள்ளப்பட்டு நூல் உருவாகின்றது. காரணம் நூல்களை அங்கு வாசிக்கிறார்கள். அங்கு மட்டுமல்ல ஆங்கிலத்தில் உருவாகும் நூல்கள் உலகம் முழுவதும் சந்தை வாய்ப்பைப் பெறுகின்றன. தமிழ் நாட்டில் ஆர்.கே.நாராயணன் என்ற எழுத்தாளரின் நாவல்கள் இங்கிலாந்திலேயே பிரசுரிக்கப்பட்டு அங்கு மட்டுமன்றி பல நாடுகளில் பெருவாரியாக விற்பனையாகின. தமிழ் நாட்டுக் கிராமிய வாழ்க்கையை அழகான ஆங்கிலத்தில் மிக இலகுவாக அவரால் எங்ஙனம் எழுத முடிந்தது என்று தெரியவில்லை. ஆங்கிலம் படித்த இந்தியர்கள் மட்டுமன்றி ஆசிய நாடுகள் பற்றிய ஆர்வலர்கள் அனைவராலும் அவை வாசிக்கப் பட்டன.

உங்கள் கதைகளுக்கான கருவை எவ்வாறு தேர்ந்தெடுக்கிறீர்கள் என்று ஒரு பேட்டியாளர் அவரிடம் கேட்ட போது, எனக்கு வேண்டிய விடயங்களைத் தேடி நான் நகரங்களுக்குப் போவதில்லை. நாட்டின் கிராமப் பகுதிகளுக்குப் போகின்றேன். அங்கே ஆட்களை சந்திக்கின்றேன். விஷயம் கிடைத்து விடுகிறது என்றார்.

சாகித்திய மண்டல விருதுக்காக திரு ஆர்.கே.நாராயணன் புதுடில்லிக்குப் போயிருந்தார். விருது வழங்க வந்திருந்த அப்போதைய இந்தியப் பிரதமர் ஜவகர்லால் நேரு, ''புதுடில்லிக்கு நீங்கள் இப்பொழுது எத்தனையாவது தடவை வந்திருக்கிறீர்கள்'' என்று கேட்டார்.

''புதுடில்லிக்கு இப்போது தான் முதல் தடவையாக வந்திருக்

நேசித்து- அந்த எழுத்தின் மூலம் சமூகத்திற்கு பணியாற்றும் எண்ணம்

## —நூல்கள்

கொண்டிருந்தவர்கள், தாம் எழுதியவற்றை நூலுருவில் காண்பதற்கு எவ்வளவு தவித்திருக்கிறார்கள் என்பதை அவர்களிடம் தான் கேட்டறிய வேண்டும்.

ஏதோ அதை இதை செய்து சில சமயம் மனைவியின் நகைகளை விற்று புத்தகம் போட்டவர்கள் உண்டு. புத்தகம் போட்டு விட்டால் போதுமா அதை விற்பதற்கு அவர்கள் பட்டுள்ள பாடுகள் எல்லாம் சொல்லில் மாளாது.

அண்மையில் ஒரு நல்ல காரியத்தை செய்து அந்தக் காலத்து எழுத்தாளர்கள் பலரது ஆத்மாக்களை சாந்தியடைய செய்திருக்கிறார்கள் யாழ். இலக்கிய வட்டத்தினர். சுதந்திரன் பத்திரிகையில் வெளிவந்துள்ள சிறுகதைகள் பலவற்றைத் திரட்டி நூலாக வெளியிட்டதைத் தான் கூறுகின்றேன். இந்த நல்ல முயற்சிக்குரிய பாராட்டுப் பெரிதும் எழுத்தாளர் செங்கை ஆழியான் அவர்களையே சேரும். மேற்கொண்டும் இவ்வாறான ஒரு முயற்சியில் அவர் இறங்கியிருப்பதாகத் தெரிகிறது. வெளிநாட்டில் இப்படியான காரியங்களுக்கு உதவ எண்ணங் கொண்டிருப்பவர்கள் அவருடன் தொடர்பு கொண்டால், எண்ணி ஒரு நல்ல காரியத்துக்கு உதவிய பெருமை அவர்களையே சாரும் அல்லவா!

வெளிநாட்டிலுள்ள எழுத்தாளர்கள் பலரும் இப்பொழுது புத்தகம் போடுவதில் ஆர்வம் காட்டுகிறார்கள்.அண்மைக் காலத்தில் பலர் அவ்வாறான புத்தகங்களை வெளியிட்டிருக்கிறார்கள். ஆனால் அவை பற்றிய செய்திகள் தான் எமக்குக் கிடைக்

வாங்கிக் கொண்டு வந்திருந்தார்கள். விசித்திரமான வழக்கம் தான். நம் நாட்டில் பிரசங்கம் கேட்க ரிக்கற் வைத்தால் மண்டபம் காலியாகத் தான் இருக்கும். பிரசங்கம் கேட்பவர்களை விட பிரசங்கம் செய்பவர்களுக்கு தான் உற்சாகம். ஆகவே ஏதாவது வெகுமதி கொடுத்துத் தான் கூட்டத்தைச் சேர்கக வேண்டும் என்று எழுதியுள்ளார்.

⌖ ⌖ ⌖ ⌖

### *ஷாவின் தாடி*

தாடிக்காரர்கள் பற்றி அன்று எழுதியிருந்தேன்- பெரும்பாலான பெரிய எழுத்தாளர்கள் எல்லாரும் தாடி வைத்துக் கொள்வதில் பிரிய விருப்பமில்லாமல் போய் விட்டது. ஆதனால் வேலையை விட்டு விட்டு லண்டனுக்குப் புறப்பட்டார். அங்கே ஏற்கனவே கலை உலகில் பிரகாசித்துக் கொண்டிருந்த தனது தாயாருடன் சேர்ந்து கொண்டார். தாயாரிடமிருந்தே கலைகளில் ஆர்வத்தையும் அறிவாற்றலையும் பெற்றுக் கொண்டதாக அவரே கூறியுள்ளார்.

இருபது வயதில் லண்டன் போய்ச் சேர்ந்த பேர்னாட்ஷா முகச்சவரம் செய்யாமலே இருந்தார். பிறகு இனி சவரம் செய்வதே இல்லை என்றும் தீர்மானித்துக் கொண்டாராம்.

**அன்பன்**

# சிறுவர், தாய்மாருக்கு புற்று நோய் சிகிச்சை

(யாழ்ப்பாணம்)

புற்று நோய் வைத்தியசாலையில் பணியாற்றும் வைத்தியக் கலாநிதி ஜெயக்குமார், நாளை ஞாயிற்றுக்கிழமை யாழ்.போதனா வைத்தியசாலையில் சிறுவர்களுக்கும், தாய்மார்களுக்கும் புற்று நோய் சம்பந்தமான சிகிச்சை அளிக்கவுள்ளார்.

அவரிடம் சிகிச்சை பெற விரும்புவோர் வெளிநோயாளர் பிரிவில் காலை 8 மணி தொடக்கம் 2 மணி வரையும் நடைபெறவிருக்கும் இந்த சிகிச்சைக்குச் சமுகம் அளிக்குமாறு பணிப்பாளர் கேட்டுள்ளார். (உ)

## தினசரி தியானம்

### சாதனம்

ஜபம், தியானம், சத்சங்கம், சாஸ்திரங்களை வாசித்தல் இவற்றில் உன் மனதைச் செலுத்து. ஒரு நாளும் இந்த சாதனங்களைத் தவறாது தொடர்ந்து செய்ய வேண்டும். சுயநலம் கருதாது சேவை செய்வதன் மூலமும், உன்னிடம் உள்ளதைப் பிறருடன் பகிர்ந்து கொள்வதன் மூலமும் தவறாது சாதனம் செய்வதன் மூலமும் இறைவன் புகழைப் பாடிக்கொண்டு ஆனந்தமாக வாழ்க்கையை நடத்து.

**சுவாமி சிவானந்தர்**

## தவக்கால நற்சிந்தனை

**''மாசற்ற வழியில் நடப்போர் பேறு பெற்றோர''**

பகைவனை நேசிப்பதா? எதிரியை அரவணைப்பதா? முட்டாள் தனம். கோளைத்தனம்- இதுவே உலக நியதி. ஆனால் இயேசுவின் சாதனையின் உச்சக்கட்டமே பகைவரையும் மன்னித்து அன்பு செய்வது தான் பகைவரை அன்பு செய்யும் வலிமையை ஒருவன் பெற்றுவிட்டால் என்பதே பொருள். பகைவரை நேசிப்பது என்றால் அவரை மன்னிப்பதும் அவருக்கு நன்மைகள் விளைவிப்பதும் ஆகும்! பகைவருக்கு எதிராக நம் உள்ளத்தில் கசப்புணர்வுகளை தேக்கி வைப்பதால் நாம் நமது ஆன்மா நல்லதை மட்டுமல்ல. உடல் நலத்தையும் இழந்து விடுகின்றோம். நம் நெஞ்சங்களை நாமே புண்ணாக்கிக் கொள்கின்றோம். ''நாம் பாவிகளாய் இருந்தபோதே கிறிஸ்து நமக்காகத் தம் உயிரைக் கொடுத்தார்'' இவ்வாறு கடவுள் நம்மீது கொண்டுள்ள தம் அன்பைக் காட்டியுள்ளார். (உரோ 5:8) நம் குறைகளுக்கு மத்தியிலும் தொடர்ந்து அன்பு செய்கிறார். ஆன்மபலம் மிக்கவர்களாய் பகைவர் களையும் ஏற்றுக் கொண்டு வாழும் வரத்தை இறைவனிடம் கேட்போம்.

**காவலன்**

# புலிகளின் ஆயுதக் கொள்வனவை உடன்படிக்கை தடுக்கவில்லை!

## கலாநிதி பாலசிங்கம் அறிவிப்பு

(நமது நிருபர்)

விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கொண்டு வருவதை தடை செய்ய வேண்டுமென்றால் இலங்கை அரசும் தனது ஆயுதக் கொள்வனவுகளை உடன் நிறுத்த வேண்டும். இவ்வாறு விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் கூறியுள்ளார். இவ்விடயம் தொடர்பாக அன்ரன் பாலசிங்கம் மேலும் கருத்து வெளியிடுகையில் தெரிவித்திருப்பதாவது;

யுத்த நிறுத்த உடன்படிக்கையின் பிரகாரம் இரண்டு தரப்பினரும இராணுவ சமநிலையைப் பேண வேண்டும் என்று கூறப்பட்டிருக்கின்ற போதும். அரசு மட்டும் ஆயுதங்களைக் கொள்வனவு செய்வதிலும், இராணுவத்தை பலப்படுத்துவதிலும் ஈடுபட்டிருக்கின்றமை இராணுவச் சமநிலை என்ற கோட்பாட்டிற்கு முரணானதாகும். இலங்கை அரசு ஆயுதங்களைக் கொள்வனவு செய்தால் விடுதலைப புலிகளும் ஆயுதங்களைக் கொண்டு வருவதைத் தடுக்க முடியாது. யுத்த நிறுத் உடன்படிக்கையில் விடுதலைப் புலிகள் ஆயுதங்களை கொண்டு வருவதற்கு எந்தவிதமான தடையும் விதிக்கப்படவில்லை என்றும் எதிர்காலத்தில் கடற் பரப்பில் அரசும் விடுதலைப் புலிகளும் எவ்வாறு செயற்படுவது என்பது குறித்து இலங்கை அரசு, நோர்வே அரசு, யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு ஆகியவற்றுடன் பேசி புதிய வரைவு ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (வ)

# மெய்வல்லுநர் போட்டி

(கோப்பாய்)

நீர்வேலி தெற்கு இ.த.க. பாடசாலையின் மெய்வல்லுநர் போட்டி இன்று பி.ப 3.00 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் ஆ.சபாநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக கனடா நலன்புரிச் சங்கத்தின் நீர்வேலிக் கிளைத் தலைவர் ஆ.இராசநாயகமும், சிறப்பு விருந்தினராக கோப்பாய்க் கோட்ட உதவிக் கல்விப்பணிப்பாளர் இ.சிவஞானசுந்தரமும் கலந்து கொள்ளவுள்ளனர். (உ)

# பதிவுகளை மேற்கொள்ளலாம்

(கல்வியங்காடு)

இலங்கை திறந்த பல்கலைக் கழக யாழ்.பிராந்திய நிலையத்தில் எந்திரவியல் டிப்ளோமா கற்கை நெறிக்கான பதிவுகள் இன்றும் நாளையும் யாழ்.பிராந்திய நிலையத்தில் மேற்கொள்ளப்படவுள்ளன.

விண்ணப்பித்தவர்கள் தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறு இயக்குநர் ஆ.ஞானேந்திரன் கேட்டுள்ளார். (இ-5;54)

# வழிகாட்டல் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

கடந்த வருடம் நடைபெற்ற க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களின் நன்மை கருதி உயர் கல்விக் கற்கை நெறித் தெரிவிற்கான வழிகாட்டல் கருத்தரங்கொன்றினை யாழ்.மாவட்ட கல்வி மேம்பாட்டுப் பேரவையினர் ஏற்பாடு செய்துள்ளனர்.இக் கருத்தரங்கு நாளை மறுதினம் திங்கட்கிழமை முற்பகல் 10மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி,யாழ்.மத்திய கல்லூரி ஆகிய இடங்களில் நடைபெறும்.

யாழ்ப்பாணக் கோட்டப் பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் இக் கருத்தரங்கில் கலந்து கொள்வதற்கு அழைக்கப்படுகின்றனர்.மாணவர்கள் பாடசாலைச் சீருடையில் வருகை தருதல் வேண்டும் எனவும்,ஆர்வமுடைய பெற்றோரும் இதில் கலந்து கொள்ளலாம் எனவும் பேரவைத் தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸ் கேட்டுள்ளார். (த)

# தொண்டர் ஆசிரியர்கள் கிளிநொச்சியில் பேரணி

(கிளிநொச்சி)

வடக்கு கிழக்கு மாகாண தொண்டர் ஆசிரியர்களை நிரந்தரமாக்கக் கோரி நேற்று கிளிநொச்சியில் ஊர்வலம் ஒன்று நடத்தப்பட்டது. இந்த ஊர்வலத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட ஆசிரியர்களும் மாணவர்களும் கலந்து கொண்டனர்.

நேற்றுக் காலை 10.30 மணிக்கு கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயத்தில் இருந்து ஆரம்பமான ஊர்வலம் கிளிநொச்சி பிரதேச சபையை அடைந்தது. அங்கு கூட்டம் ஒன்று நடத்தப்பட்டது. கூட்டமுடிவில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் இராசநாயகத்திடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

இதேவேளை தொண்டர் ஆசிரியர்களை நிரந்தரமாக்கக் கோரி மன்னார், வவுனியா ஆகிய இடங்களிலும் நேற்றுப் பேரணிகள் இடம்பெற்றன.(த)

# திறமையான வீரர்களுக்கு பெறுமதிமிக்க பரிசில்கள்

(யாழ்ப்பாணம்)

எல்.ஜ நிறுவனத்தின் ஏகவினியோகஸ்தர்களான அபான்ஸ் கம்பனியினரும் அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட விநியோகஸ்தர்களான யாழ். மின்னகம்,உஷா ஏஜன்சி, சுந்தர்சன் ஆகியோர் இணைந்து யாழ்.சென் ஜோனஸ் கல்லூரிக்கும், யாழ்.மத்திய கல்லூரிக்கும் இடையில் நடைபெறும் கிரிக்கெட் போட்டியில் பங்கேற்கும் வீரர்களுக்கு பல மின்சார உபகரணங்களை பரிசாக வழங்கவுள்ளன.

இதன்படி ஆட்டநாயகனுக்கு கலர் எல்.ஜீ தொலைக்காட்சிப் பெட்டியும் சிறந்த துடுப்பாட்ட வீரருக்கு எல்.ஜீ சலவை எந்திரமும்,சிறந்த பந்து வீச்சாளர்,சிறந்த களத்தடுப்பாளர் ஆகியோருக்கு தலா ஒரு ஹிவி ஓடியோக் கருவியும்,சகல துறை ஆட்டக்காரருக்கு வீடியோ சீடியும் அதிக ஓட்டங்களைப் பெறுபவருக்கு வீடியோ சீடி பிளேயரும் வழங்கவுள்ளது.

இதேவேளை எல்.ஜீ.நிறுவனம் உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிக்கு அனுசரணை வழங்கி வருவதும் குறிப்பிடத்தக்கது. (த-5)

### ஜனாதிபதி.....

செயற்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கிஸன் ஜனாதிபதியுடனான சந்திப்பையடுத்து கருத்து வெளியிடுகையில் சமாதான வழிமுறைகளில் குறைபாடுகள் இருந்தாலும் சரி சமாதான முயற்சிக்கு ஆதரவு வழங்குவதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளதாகவும் கூறினார்.

இது இவ்வாறிருக்க ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவை நோர்வேக்கு வருகை தருமாறு நோர்வேயின் பிரதி வெளிவிவாகார அமைச்சர் விடுத்த அழைப்பை ஏற்று அவர் எதிர்வரும் நவம்பர் மாதம் நோர்வேக்கு செல்ல இருப்பதாகவும் ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் பீரிஸ் கூறியுள்ளார். (வ)

### பளையில்.....

ப.அரியரத்தினம் ஏற்றிவைக்க தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தமிழீழத் தேசியக் கொடியினை ஏற்றிவைத்தார்.

இதனைத் தொடர்ந்து தமிழீழ வைப்பகக் கொடியினை தமிழீழ காவல் துறைப் பொறுப்பாளர் ப.நடேசன் ஏற்றி வைத்தார். கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் எஸ்.இராசநாயகம்,கல்விப் பணிப்பாளர் ப.அரியநாயகம் ஆகியோர் கருத்துரைகளை வழங்க அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம்சிறப்புரை ஆற்றினார். (வ-4)

### சுயாட்சி வழங்க........

யுத்தம் நடந்தாலும் சரி, சமாதான சூழ்நிலை இருந்தாலும் சரி,எமது நிர்வாகம் தொடர்ந்தும் இங்கு இருக்க வேண்டும்.தொடர்ச்சியாகப் பலப்பட்டு வரவேண்டும்.நிர்வாக அலகுகளில் மக்களின் பங்களிப்பு இருக்க வேண்டும்.

இப்போது நாம் அரசாங்கத்துடன் சமாதானப் பேச்சுவார்த்தையை நடத்தி வருகிறோம்.இப் பேச்சுவார்த்தையையும் ஒரு காரணத் தோடுதான் நடத்தி வருகிறோம்.எமக்கு சர்வதேச அங்கீ

வரவேண்டும்.எங்களைப் பொறுத்த வரையில் சிங்கள தேசத்ததிற்கு அப்படியான சிந்தனையில்லை என்றே கூற வேண்டும்.

தமிழ் மக்களை அரவணைத்து அவர்களுக்கு சுயாட்சி அதிகாரம் வழங்கி அவர்களது தாயகத்தில் அவர்கள் நிம்மதியாகவும், கௌரவமாகவும்,சுதந்திரமாகவும் தம்மைத்தாமே ஆளும் நிர்வாகக கட்டமைப்பை உருவாக்கி கொடுகக வேண்டும் என்ற எண்ணம் சிங்கள மக்களிடம் இல்லை.இந் நிலையில்

### திருகோணமலை.....

வைத்து தாக்கி அழிக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்துமே இக் ஹர்த்தால் நடத்தப்பட்டுள்ளது.

ஹர்த்தால் காரணமாக வர்த்தக நிலையங்கள் அரச அலுவலகங்கள் மறறும் தனியார் நிறுவனங்கள் பாடசாலைகள் என்பன இயங்கவில்லை. போக்குவரத்துக்கள் முற்றாக செயலிழந்தன.கறுப்புக் கொடிகளும் பரவலாகக் கட்டப்பட்டிருந்தது. (த)

# நகைகள் ஏலத்தில்

(யாழ்ப்பாணம்)

மக்கள் வங்கியின் யாழ்.பிரதான வீதிக் கிளையிலும் நெல்லியடிக்கிளையிலும 31.12.1984வரை அடகு வைத்து இதுவரை மீட்கப்படாத நகைகள் யாவும் இன்று முதல் பகிரங்க ஏலத்திற்கு விடப்படவுள்ளதாக மக்கள் வங்கியின் யாழ்.பிரதேச முகாமையாளர் கே.சிவபாதவிருதையர் தெரிவித்துள்ளார்.

இதன்படி இன்று முதல் எதிர்வரும் 19ம் திகதி வரை பிரதான வீதிக் கிளை நகைகளும், நெல்லியடிக் கிளை நகைகள் 20ம் திகதி முதல் 23ம் திகதி

வீரர்களுக்கு பல மின்சார உபகர ணங்களை பரிசாக வழங்கவுள்ளன.

இதன்படி ஆட்டநாயகனுக்கு கலர் எல்.ஜீ தொலைக்காட்சிப் பெட்டியும் உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிக்கு அனுசரணை வழங்கி வருவதும் குறிப்பிடத்தக்கது. (த-5)

### சுயாட்சி வழங்க........

யுத்தம் நடந்தாலும் சரி, சமாதான சூழ்நிலை இருந்தாலும் சரி,எமது நிர்வாகம் தொடர்ந்தும் இங்கு இருக்க வேண்டும்.தொடர்ச்சியாகப் பலப்பட்டு வரவேண்டும்.நிர்வாக அலகுகளில் மக்களின் பங்களிப்பு இருக்க வேண்டும்.

இப்போது நாம் அரசாங்கத்துடன் சமாதானப் பேச்சுவார்த்தையை நடத்தி வருகிறோம்.இப் பேச்சுவார்த்தையையும் ஒரு காரணத் தோடுதான் நடத்தி வருகிறோம்.எமக்கு சர்வதேச அங்கீகாரம் வேண்டும்.அதற்காவே அரசுடன் சமாதானப் பேச்சில் ஈடுபட்டுள்ளோம்.

எங்களைப் பொறுத்தவரையியிலும்,தமிழீழ மக்களைப் பொறுத வரையிலும் இரண்டு விதமான தீர்வு சாத்தியப்படக் கூடியதாக உள்ளது. ஒன்று தமிழீழ அரசு,மற்றது தமிழீழ சமஷ்டி அரசு.இந்த இரண்டு தீர்வையும் விட வேறு மாற்று வழி ஒன்றும் எமக்கு இல்லை.இந் நிலையில் தமிழீழ சமஷ்டி அரசசு இங்கு உருவாகுவதற்கு சிங்கள மக்கள் இணங்கி வரவேண்டும்.எங்களைப் பொறுத்த வரையில் சிங்கள தேசத்ததிற்கு அப்படியான சிந்தனையில்லை என்றே கூற வேண்டும்.

தமிழ் மக்களை அரவணைத்து அவர்களுக்கு சுயாட்சி அதிகாரம் வழங்கி அவர்களது தாயகத்தில் அவர்கள் நிம்மதியாகவும், கௌரவமாகவும்,சுதந்திரமாகவும் தம்மைத்தாமே ஆளும் நிர்வாகக கட்டமைப்பை உருவாக்கி கொடுகக வேண்டும் என்ற எண்ணம் சிங்கள மக்களிடம் இல்லை.இந் நிலையில் சிங்கள மக்களுக்கு நாம் இறுதியான சந்தர்ப்பத்தை வழங்கியுள்ளோம். இச்சந்தர்ப்பத்தை அவர்கள் ஏற்று தமிழர் தாயகத்தில் சுயாட்சி அதிகாரம் உடைய நிர்வாகத்தை உருவாக்கிக் கொடுக்க வேண்டும். இல்லாது போனால் இன்றைய புலிகளின் நிர்வாகம் தனி அரசாக மாறுதை எவரலும் தடுக்க முடியாது என்ற உண்மை நிலையை உங்களுக்கு தெரிவித்துக் கொள்கின்றேன் என்றும் அன்ரன் பாலசிங்கம் தெரிவித்துள்ளார்.(ம-4)

இதேவேளை நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கிஸன் ஜனாதிபதியுடனான சந்திப்பையடுத்து கருத்து வெளியிடுகையில் சமாதான வழிமுறைகளில் குறைபாடுகள் இருந்தாலும் சரி சமாதான முயற்சிக்கு ஆதரவு வழங்குவதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளதாகவும் கூறினார்.

இது இவ்வாறிருக்க ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவை நோர்வேக்கு வருகை தருமாறு நோர்வேயின் பிரதி வெளிவிவாகார அமைச்சர் விடுத்த அழைப்பை ஏற்று அவர் எதிர்வரும் நவம்பர் மாதம் நோர்வேக்கு செல்ல இருப்பதாகவும் ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் பீரிஸ் கூறியுள்ளார். (வ)

### பேராசிரியர்.....

பெற்றுள்ள இவர் கொழும்பு பல்கலைக் கழகத்தில் இரசாயனவியல் விஷேட பட்டமும் அவுஸ்ரேலியா அடிலயிட் பல்கலைக் கழகத்தில் கலாநிதிப் பட்டமும் பெற்றவர்.

யாழ்.பல்கலைக்கழகத்தில் முன்னாள் விஞ்ஞான பீடாதிபதியாகவும் யாழ்.பல்கலைக்கழக வவுனியா வளாக முதல்வராகவும் விவசாய பீடத்தின் பீடாதிபதியாகவும் பணியாற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்த தக்கது. (வ)

மாவட்ட அரச அதிபர் எஸ்.இராசநாயகம்,கல்விப் பணிப்பாளர் ப.அரியநாயகம் ஆகியோர் கருத்துரைகளை வழங்க அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம்சிறப்புரை ஆற்றினார். (வ-4)

### திருகோணமலை.....

வைத்து தாக்கி அழிக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்துமே இக் ஹர்த்தால் நடத்தப்பட்டுள்ளது.

ஹர்த்தால் காரணமாக வர்த்தக நிலையங்கள் அரச அலுவலகங்கள் மறறும் தனியார் நிறுவனங்கள் பாடசாலைகள் என்பன இயங்கவில்லை. போக்குவரத்துக்கள் முற்றாக செயலிழந்தன.கறுப்புக் கொடிகளும் பரவலாகக் கட்டப்பட்டிருந்தது. (த)

### வன்னிப் .....

ஏ-9 கண்டிவீதியையும், வன்னியின் மேற்கு, கிழக்கு பகுதிகளையும் உள்ளடக்கி நேற்றுக்காலை 9.00மணி முதல் 10.00மணிவரை சுமார் ஒரு மணித்தியாலமாக வான் பரப்பில் வட்டமிட்டு நோட்டமிட்டுள்ளது. இதனையடுத்தே மக்கள் மத்தியில் அச்சமும் பதற்றமும் நிலவியது. (ம)

### இந்தியாவுக்கே...

மற்றும் இலங்கை ஆகிய அணிகளின் கப்டன்கள் தான் இடது கை வீரர்களாக இருக்கின்றார்கள். பிளெமிங், ஜெயசூரியா ஆகியோர் அரை இறுதி வாய்ப்புக்கு போராடிக் கொண்டிருக்கின்றார்கள். எந்தவித பதட்டமும் இன்றி வெற்றிகளைக் குவித்து வருவது இந்தியக் கப்டன் கங்குலி மட்டுமே. எனவே உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றப் போவது இந்தியக் கப்டன் கங்குலிதான் என்பதில் சந்தேகம் இல்லை என எண் ஜோதிடம் அடித்துச் சொல்கிறது. எண் ஜோதிடம் இதில் பொய்க்குமா இல்லையா என்பது இன்னும் ஏழு தினங்களில் தெரியும். (த)

## நகைகள் ஏலத்தில்

(யாழ்ப்பாணம்)

மக்கள் வங்கியின் யாழ்.பிரதான வீதிக் கிளையிலும் நெல்லியடிக்கிளையிலும 31.12.1984வரை அடகு வைத்து இதுவரை மீட்கப்படாத நகைகள் யாவும் இன்று முதல் பகிரங்க ஏலத்திற்கு விடப்படவுள்ளதாக மக்கள் வங்கியின் யாழ்.பிரதேச முகாமையாளர் கே.சிவபாத விருதையர் தெரிவித்துள்ளார்.

இதன்படி இன்று முதல் எதிர்வரும் 19ம் திகதி வரை பிரதான வீதிக் கிளை நகைகளும், நெல்லியடிக் கிளை நகைகள் 20ம் திகதி முதல் 23ம் திகதி வரை ஸ்ரான்லி வீதிக்கிளையில் வைத்து பகிரங்க ஏலத்தில் விடப்படவுள்ளன. (உ-5)

### 6ம் சுற்று...

தற்போது மேற்கொள்ளப்பட்டடு வரும் சமாதான முயற்சியில் விடுதலைப் புலிகள் ஆர்வம் காட்டி வருகிறார்கள்.டோக்கியோவில் நடைபெறவுள்ள 6வது சுற்றுப் பேச்சுவார்த்தையில் விடுதலைப் புலிகள் பங்குபற்ற வேண்டியதன் அவசியத்தை அவர்களுக்கு வலியுறுத்திக் கூறியுள்ளேன். இந்நிலையில் அவர்கள் தமது மத்திய குழுவில் இது குறித்து ஆராய்ந்து அறிக்கை ஒன்றை வெளியிடுவார்கள் என்று நம்புகிறேன்.

பொருளாதார ரீதியில் மிக நீண்ட காலமாகவே நோர்வே இலங்கைக்கு உதவி வந்துள்ளது. இதனைக் போலவே இப்பொழுதும் நோர்வே சமாதான முயற்சிக்கு உதவி வருகிறதென்றும் ஹெல்கிஸன் தெரிவித்துள்ளார். இத் திறப்பு விழா வைபவத்தில் அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல் பீரிஸ் நோர்வேத் தூதுவர் ஜோன் வெஸ்பேர்க் ஆகியோரும் உரையாற்றினர். (வ)


இந்தியா போட்டா ஆச்சிரம இறை தியானக் குழுவினரால் நடத்தப்படும்



இறை தியான

குணமாக்கல்

வழிபாடுகள்



மார்ச் 19,20,21ஆம் திகதிகளில்

யாழ்.புனித அடைக்கல அன்னை ஆலய முன்றலில்

தினமும் மாலை 3.30முதல் 7மணி வரை.

இவ் வழிபாடுகளில் பங்கு பற்றுவோர் மூன்று தினங்களும் தொடர்ச்சியாகப் பங்குபற்றுவது மிகுந்த பலனைக் கொடுக்கும்.

பாவ வாழ்விலிருந்து விடுதலைபெற, கவலைகள், கஷ்டங்கள் நீங்கி அமைதிபெற, நோய்கள் நீங்க, உலக அமைதி பிறக்க நம்பிக்கையோடு வாருங்கள்.

(இறுதி பேருந்தில் வீடு திரும்பலாம். மூன்று நாள்களுக்கும் தங்கியிருக்க விரும்புவோருக்கு தங்குமிட வசதிகள் உண்டு.)

இறைதியான குழுவினர் (C/5848) -ஆயர் இல்லம்

MEDICAL CHECK UP
வைத்திய பரிசோதனை

நோய் வருமுன் காப்போம்
திடீர் மரணத்தைத் தவிர்ப்போம்

- 40 வயதிற்கு மேற்பட்ட நோய் உள்ள, நோய் அற்ற அனைவரும் இந்த MEDICAL CHECK UP ஐச்செய்வதன் மூலம் நோயற்ற சுகவாழ்வு வாழலாம்
- X-RAY, ECG, சில முக்கிய இரத்தப் பரிசோதனைகள், சிறுநீர்ப்பாசோதனை. இலவச வைத்திய ஆலோசனையுடன் கூடிய MEDICAL CHECK UP குறைந்த கட்டணத்தில்! விபரங்களுக்கு நேரில்!

போக்குவரத்து வசதி கருதி

சம்பந்தர் மொடேர்ன் கிளினிக்

(அமுல் கிறீம் ஹவுஸ் அருகில்)
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். [C/5602]



இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.03.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.